சிவ சிவ] உ 131

திருவருள் துணை

# குமரகுருபரன்




மலர் 28 | நள ஞு பங்குனி மீ 1௨ (14—3—77) | இதழ் 3


நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துறம
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

# சைவ சமயத்தின் மாண்பு (9)


ஸ்ரீ-ல-ஸ்ரீ அருணகிரிநாத
ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகபரமாச்சாரிய சுவாமிகள்
இளவரசு, மதுரை ஆதீனம்.


## 10. திருநீறு ஞானத்தை உண்டாக்கும்

உலகில் எல்லாப் பொருள்களும் தீயினால் அழிவுற்றால், அவை பிடி சாம்பலாகவே மாறும். அல்லாமலும் சிறப்பாக நமது உடம்பு என்றாவது ஒருநாள் அழியக் கூடியதே. அது அழிந்தால் சாம்பலாகும். அல்லது மண்ணோடு மண்ணாகும். இதனை, திருநீறாகிய சாம்பல் நமக்கு நினை

ஊட்டுகிறது. எப்பொழுதெல்லாம் திருநீற்றைக் கையில் எடுக்கிறோமோ அப்பொழுதெல்லாம் நல்ல உணர்வுடையோர்கட்கு நாமும் முடிவில் ஒருபிடி சாம்பலாவோம் என்ற உணர்வையும், ஞானத்தையும் திருநீறு உணர்த்துகிறது. நிலையாமையை நாம் உணர்ந்தால், அநேக கவலைகளிலிருந்து விடுபடுவதோடன்றி, மேற்கொண்டு நல்ல காரியங்களையே செய்ய முற்படுவோம்.

## 11. திருநீறு பாவத்தைப் போக்கும்

கிறிஸ்தவ பைபிளில் பழைய ஏற்பாட்டில் எண்ணுகமம் 19–ஆம் அதிகாரத்தில் திருநீறு செய்யப் பெறும் முறையும், அது தீட்டைக் கழிக்கும், பாவத்தைப் பரிசரிக்கும் என்ற உண்மைகளும் கூறப்பெற்றிருக்கிறதென்று முன்னரே விவரித்திருக்கின்றோம். ஞானசம்பந்தப் பெருமானும் "பராவணம் ஆவது நீறு, பாவம் அறுப்பது நீறு" என்று அருளியிருக்கிறார். இதே உண்மையை ஒரு வருஷத்திற்கு ஒரு பாடல் வீதம் மூவாயிரம் பாடல்களில் வேத சாரத்தைத் தமிழில் தந்தருளியிருக்கிற திருமூல தேவர் சிவபெருமான் திருநீற்றைப் பூசிக் கொண்டிருக்கிறார் என்றும், அந்தத் திருநீற்றை மங்காமல் பூசி மகிழ்கின்றவர்களது தீவினைமாளும், தீய கருமங்களால் வரக்கூடிய அவர்களது பாவம் தீரும் என்றும் உறுதியாகக் கீழ்வரும் பாடலால் விளக்கி இருக்கிறார்.

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வாரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே"

என்பது அப்பாடல். வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே" என்று மாணிக்க வாசக சுவாமிகளும் அருளியிருக்கிறார்கள்.

பாவம் என்பது ஒருவன் மற்றொருவருக்குச் செய்த தீவினையின் அளவைப் பொறுத்தும், அதை யாருக்குச் செய்தோமோ அவனுடைய தகுதியைப் பொறுத்தும்,

கடவுளால் மதிப்பிடப் பெறுகின்ற தீய பலாபலனே ஆகும். அதனுலேயே சிறிய பாவம் என்றும் பெரிய பாவம் என்றும் கூறப் பெறுகின்றன. அதனைச் "சஞ்சிதவினை" என்று சாத்திரங்கள் கூறும். அந்தப் பாவங்களுக்குரிய தீர்ப்பு, அடுத்த ஜென்மத்தில் துன்பங்களாகி கடவுளால் ஊட்டுவிக்கப் பெறும். அதனுலேயே இன்ப துன்பங்களை "பிராப்த கன்மம்" என்று சாத்திரங்கள் சொல்லும். அவ்வாறு துன்பம் வராமலிருப்பதற்குப் பரிகாரமாக சிவ சிவ என்று நீறணிந்தால், அதுவே அதற்குப் பிராயச் சித்தமும், பாவத்தைப் போக்கக் கூடிய ஒரு மாற்றுச் செயலாகவும் அமைகின்றது.

### 12. திருநீறு பரகதியைத் தரும்:–

பாவம் ஒழிந்தால், அடுத்த நிலை பரகதி நிலையே ஆகும். மண்ணுலக வாழ்வு முடிந்துவிட்டால் விண்ணுலக வாழ்விற்குச் செல்ல வேண்டியது ஆண்டவனது நியதி. இதனை, பட்டினத்து சுவாமிகள், "வினைப் போகமே ஒரு தேகம் கண்டாய், வினைதான் ஒழிந்தால், தினைப் போதளவும் நில்லாது கண்டாய்". என்று கூறியிருக்கிருர்கள். மேலும், திருநீற்றைச் சிவபெருமானும், அண்டவானவரும் அணிந்திருக்கிருர்கள் என்று எம்பெருமானைக் கண்ட அருளாளர்கள் அனைவரும் தங்கள் அருள் வாக்குகளில் சொல்லியிருக்கிருர்கள். ஞானசம்பந்தப் பெருமான், "வானவர் மேலது நீறு" "மேலுறைத் தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு" என்றும், தோடுடைய செவியன் விடையேறி ஓர்தூவென் மதிசூடி, காடுடையன் சுடலைப் பொடிபூசி என் உள்ளங்கவர் கள்வன்" என்றும் அருளியிருக்கிருர். காடுடைய சுடலைப் பொடிபூசி என்பது, சாணியினுல் உண்டாக்கப் பெற்ற எருக்கட்டிகள், சுடு காட்டில் அடுக்கப்பெற்று, அவை எரிந்தசாம்பலேயாகும். மாணிக்கவாசகப் பெருமான்சிவ பெருமானை "வெண் ணீற்ருன்" என்றும், திருநாவுக்கரசுப் பெருமான் "பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறு" என்றும் அருளியிருக்கிருர்கள், சூதசங்கிதை,

"மாலயன் இந்திரன மற்றையமரா மலர்
மகளிர்ச்சி மற்றை வானக்
கோலமட வாரியக்கர் கந்தருவர்
அரக்கர்குல அசுரர் வேதச்
சிலமுனி வரர் மற்ருேர் இவருளருந்
தவமுடையீர் திருவெண்ணீறு
சாலவுமுத் தூளனமுப் புண்டர நாள்
தொறும் போற்றித் தரியயார் யாரே"

என்று கூறுகிறது.

இதில் மேலுலகங்களிலுள்ள அனைவரும் திருநீற்றைத் தினமும் உத்தூளனமாகவும், திரிபுண்டரமாகவும் அணிந்து இருக்கிருர்கள் என்று கூறப் பெற்றிருக்கிறது.

ஒருவர், ஒரு கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்கு அவர் வெகுநாட்களாக உடலில் அணிந்துவரும் சின்னமே நல்லதொரு சான்ருகும். அவ்வாறு அணிந்து வந்தால், அவருக்கு அந்தக் கட்சி ஆட்சிக்கு வரும்போது, ஒருதனி மதிப்பு ஏற்படுகிறதல்லவா? அதுபோலவே, நம்மை நிரந்தரமாக ஆண்டுவரும் கடவுளாகிய அம்மைஅப்பனது சின்னமாகிய திருநீற்றை வெகுநாட்களாக அணிந்து வந்தால், அந்த ஒன்றினுலேயே திருவடிப்பேறு கிடைக்கும் என்பது திருமூலர்கருத்தாகும். அதனுலேயே முன்னர் கூறிய அவர் பாடலில், "சாரும் சிவகதி சிங்காரமான திருவடி சேர்வரே" என்று அருளியிருக்கின்ருர். திருவடிப் பேற்றையே தரக்கூடிய ஆற்றலுடைய திருநீறு மற்ற செல்வங்களைத் தருமா என்பதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகம் இருக்க முடியாது. "வி" என்ருல் மேலானது என்று பொருள். "பூதி" என்ருல் செல்வம் என்று பொருள். எனவே விபூதி என்ற சொல்லே "மேலான செல்வம்" என்ற பொருள் தரத்தக்கதாகும்.

### திருநீறு அல்லது விபூதி தயாரிக்கும் முறை:-

சுத்தமான பசுவினது சாணத்தை உருண்டை உருண்டையாகப் பிடித்து வெயிலில் உலர்த்த வேண்டும்.

அவ்வாறு உலர்ந்த உருண்டைகளை மூடக்கூடிய அளவு உமியை குவித்து "தீ" மூட்ட வேண்டும். மூன்று அல்லது நான்கு தினங்கள் கழித்து அக்குவியல் நன்ருக நீறி உமியும், சாணியும் சாம்பலாகியிருக்கும். உமிச்சாம்பலை விலக்கி, நீறியிருக்கும் சாணி உருண்டைகளை எடுத்துத் துணியினுல் வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும். அதுவே திருநீறு அல்லது விபூதியாகும்.

### திருநீறு அணிந்து கொள்ளும் முறை:-

காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடனும், குளித்தபின்னரும், சாப்பிடுவதற்கு முன்னரும், பின்னரும் படுப்பதற்கு முன்னரும் "சிவ சிவ" என்று சொல்லி அண்ணுந்து நெற்றியிலும், தொப்பூளிலிருந்து கழுத்து வரையிலும், இரண்டு கைகளிலும் மணிக்கட்டிலிருந்து புஜம் வரையிலும் தண்ணீரில் குழைக்காமல் தூளாகவே யாவரும் அணிந்து கொள்ளலாம் தீட்டுக்கழிக்கும் சக்தி வாய்ந்த திருநீற்றிற்குத் தீட்டு என்பதே கிடையாது. சிவ தீட்சை பெற்றவர்கள் திருநீறு அணிய வேண்டிய காலங்களையும், அவற்றிற்குரிய மந்திரங்களையும் அவரவரது குரு மூலம் அறிந்து அதன்படி, தண்ணீரில் குழைத்து அணிந்து கொள்ள வேண்டும். அவர்களும் மற்ற நேரங்களில் மேலே சொன்னவாறு அணிந்து கொள்ளலாம்.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரேயே திருநீற்றின் பெருமையையும், அவசியத்தையும், இந்தியாவிற்கும், இலங்கைக்கும் வெளியே உள்ள நாடுகளில் மக்கள் உணர்ந்து பயன் படுத்தி வந்திருக்கிருர்கள் என்பது புலனுகின்றதல்லவா? இந்த உண்மையை அறிந்து நாமும் திருநீற்றை உடலிலும், நெற்றியிலும் பூசி எல்லா நலன்களும் பெற்றுத் திகழ்வோமாக!!

—

[தொடரும்]

# ஞானசம்பந்தரும் நற்றமிழும்

11—வது பாசுரம்! திருச்சிற்றம்பலம் கோயில்:

ஞாலத்துயர்காழி ஞானசம் பந்தன்
சீலத்தார் கொள்கைச் சிற்றம்பலமேய
சூலப்படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத்தாற் பாடவல்லார் நல்லாரே.

திருச்சிற்றம்பலம்

சிவபெருமானது கருணைப் பெருக்கால் நமது ஊனசம் பந்தம் நீக்கியருளும் ஞானசம்பந்தப் பெருமான் கோயில்த் திருப்பதிகம் முதல்த் திருமுறையிலே அருளிய பத்துப் பாசுரங்களிலும் அருளிய அற்புதக் கருத்துக்களை அனுபவித்தோம். திருக்கடைக்காப்பென்னும் பதினொருவது திருப்பாசுரத்திலே நல்லவர் யாரென்று அருளிச் செய்கின்றார். ஊழிக் காலத்திலே நிலவுலக முழுவதும் வெள்ளத்திலே மூழ்கி அழிந்துவிடும். ஆனால் அப்போது சீகாழியென்னுந் திருப்பதி அவ்வெள்ளத்தில் மூழ்காமல் தோணியைப் போல் மிதக்குமாம் இதனால் அதற்கு தோணிபுரம் என்றும் பெயர் விளங்குகிறது. எல்லா ஊர்களும் வெள்ளத்திலே ஆழ இந்த ஊர் வெள்ளத்திலே உயர்வதால் ஞாலத்துயர் காழியென்றருளிச் செய்தார் ஞானசம்பந்தர். சம்பந்த சுவாமிகள் அவதாரம் புரிந்த ஊரைவிட உயர்ந்த ஊரும் வேறு உண்டோ? ஞாலத்துயர்காழியில் வந்த ஞாலத்துயர் ஞானசம்பந்தர் ஞாலத்துயர்தவமென்னும் சரியை கிரியை யோக ஞான தவங்கள் நிறைந்த ஞாலத்துயர் சிற்றம்பலத்திலே ஞாலத்துயர் சூலப்படையானை ஞாலத்துயர் தமிழ் மாலையால் ஏத்திய இத்திருப்பதிகத்தை கோலத்தாற்பாட வல்லவர் யாரோ அவரே திருஞானசம்பந்த சுவாமிகள் = திருவாக்காலே. நல்லவர் என்னும் சிறப்புப்பட்டம் பெற்றவராவார். கோலத்தாற் பாட வல்லவர் அல்லாதவர்களெல்லாம் ஞானசம்பந்தரால் நல்லவரென்று பெயர் பெறாதவர்களென்று

அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இதனுல் ஞானசம்பந்தருக்கு மேல் உயர்ந்தவரில்லையென்றும், சரியையாதி தவங்களுக்கு மேல் உயர்ந்த தவமில்லை யென்றும். சிவபெருமானுக்கு மேல் உயர்ந்த தெய்வமில்லை யென்றும். இவற்றை அறிவிக்கும் சைவ சமயத்திற்கு மேல் சமயமில்லையென்றும். இக்கட்டுரையை வாசிக்கும் ஒவ்வொரு அன்பர்களும் தெளிந்து மனதில் பதித்துக்கொண்டு கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் அவசியம் அவசியம். சீலத்தார் கொள்கை என்றது என்னெனின். சீலமென்னும் தவமுடைய உயிர்கள் சிவபெருமானை அடைவதற்கு தகுந்த தாயும் அஃதில்லாத உயிர்கள் வேறு எவ்வகையாலும் சிவபெருமானை அடைய தகாதன வாயுமிருக்குமாதலால், உயிர்களுக்கு தவம் அவசியமானது. தவமில்லாத மனிதர் தோலினுல் செய்த பொம்மை என்கிருர். மாணிக்கவாசக சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்

சீலமின்றி நோன்பின்றி செறிவேயின்றி யறிவின்றி
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலுங்காட்டி வழிகாட்டி வாரா உலகநெறிபேறக்
கோலங்காட்டி யாண்டானை கொடியேன் என்றே கூடுவதே.

திருச்சிற்றம்பலம்

தவமென்பது நான்கு வகையாகும். அது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பதாம். சமய தீக்ஷை பெற்று சிவபெருமானுக்கும் குருவுக்கும் சிவனடியார்களுக்கும் திருத்தொண்டு செய்தல் சரியைத் தொழிலாம். இதற்குப்பயன் சிவலோகத்திலே வாழ்தலாம்.

விசேட தீக்ஷை பெற்று சிவபூசை குருபூசை சிவனடியார் பூசைசெய்தால் கிரியைத் தொழிலாம். இதற்குப் பயன், சிவபெருமானுக்கு சமீபத்திலே வாழ்தலாம். நிருவாண தீக்ஷை பெற்று, ஞான சாத்திரங்களை யோதியுணர்ந்து, கேட்டுத் தெளிந்து இதயத்தே சிவபெருமானை கூடி நிற்பதாகிய யோகம். யோகத் தொழிலாம் இதற்குப் பயன் சிவபெருமானைப் போன்ற உருவம் பெற்று

வாழ்தலாம். இந்த யோக முதிர்ச்சியினுல் ஞானம் பெற்று சிவபெருமானை சதாகாலமும் இடையருது ஞானத்தால் பூசிப்பது ஞானத் தொழிலாம். இதற்குப் பயன் சிவபெருமானேடு இரண்டறக் கலத்தலாகிய சிவசாயுச்சிய முத்தியாம் இதற்குப் பிரமாணம் சிவஞான சித்தியாரில்,

சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திரமார்க்கம்
தாதமார்க்கம் என்று சங்கரனை யடையும்
நன்மார்க்கம் நாலவைதான் ஞானயோக
நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வார்
சன்மார்க் கமுத்திகள் சாலோக்கிய சாமீப்பிய
சாருப்பிய சாயுச்சியம் என்று சதுர்விதமாம்
முன்மார்க்க ஞானத்தால் எய்துமுத்தி
முடிவென்பன்பர் மூன்றினுக்கும் முத்திபதம் என்பர்.

என்பதால் தெளியலாம். சரியையாளர் சிவபெருமானுக்கு தொண்டராகவும், கிரியையாளர் புத்திரனுகவும் :: யோகியாருக்கு தோழராகவும், ஞானியார் நாயாகியாகவும் முறை பெறுபவர் என்று வேதம் ஆகமம், புராணம் திருமுறைகள் மெய்கண்ட சாத்திரங்கள் மற்றெல்லா ஞான நூல்களும் முழங்குகின்றது. இந்த நெறியில் வாராதவர்கள். மேலே கூறிய சிவசாலோக முதலியவற்றில் எதைப் பெறமுடியும். சிவபெருமானுக்கு என்ன முறையுடையராவார். ஒன்றும் பெறமாட்டார், ஒருமுறையும் இல்லாதவர் என்பது திண்ணம். உலகிலே பல பக்தர்கள் இவ்வுண்மைகளை உணராமல் தம் மனம் போன வழியெல்லாம் சென்று, சமய உண்மை தெய்வ உண்மை. ஒன்றுந் தெரியாமல் சிவபெருமான் அருளியிருக்கும் வழிகளையுமறியாமல்வீணே காலத்தையும், பொருளையும் செலவழித்து திரிந்து பாவப் பெருங்குழியில் வீழ்கிருர்களேயென இரங்கி அருளுகிருர் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்.

சித்தாந்தத்தே சிவன்றன்றன் திருக்கடைக்கண் சேர்த்தி
செனனம் ஒன்றிலே சீவன் முத்தராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி
மடுத்தானந்தம் பொழிந்து வரும் பிறப்பை யறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்ப னென்று
பொழிந்திடவு மூலகரெலா மூர்க்க ராகி
பித்தாந்தப் பெரும்பிதற்று பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவரிது வென்ன பிராந்தி.

என்பதால் தெளியலாம். ஆகவே சைவ சித்தாந்த நெறியில் நல்ல குரு மூலமாக சிவபெருமானை அடையும் தவநெறியை பெற்றுக் கொள்வதே மிக முக்கியமானது என்பதை நன்ருக அறிந்து கொள்ளவும், இன்றே பெற்றுக் கொள்ளுங்கள். நாளையென்பீராகில் நம்முடை முறை நாளாவதுமறியோம் அவனுடை முறைநாளாவதுமறி யோம். எப்போதாயினும் கூற்றுவன் வருவான் சாக்கிரதை சாக்கிரதை சாக்கிரதை. இனி, சூலப்படை யான் என்றது என்னெனின் சிவபெருமான் திருக்கரத் திலே சூலமென்கிற மூன்று பிரிவுடைய ஆயுதத்தை வைத்திருக்கிருர். இது பிரமா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவருக்கும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் மேல், கீழ், நடு ஆகிய மூன்று உலகங் களுக்கும் நானே தலைவன் என்பதை உணர்த்துவதாம். அருமைத் திருவாசகத்தாலறிந் தானந்தமடையுங்கள்.

"இருதலைக் கொள்ளியினுள் ளெறும்பொத்து நினைப்பிரிந்த
விரிதலையேனை விடுதிகண்டாய் வியன் மூவுலகுக்கு
ஒருதலைவா மன்னுமுத்தரகோச மங்கைக் கரசே
பொருதலை மூவிலை வேல்வலனேந்திப் பொலிபவனே"

(இனி)

என்பதால் தெளியலாம். தமிழ்மாலை என்றது என்னெ னின் சிவபெருமானுல் எல்லா மொழிகளும் உண்டாயின வென்பதும் அவனுக்கு எல்லா மொழியும் பிரியமென்பதும் உண்மை. ஆயினும், தமிழ்மொழியில் மிக்க விருப்பமென் பதும் மறுக்க முடியாத உண்மை ஏனெனில் தேவருக் கெட்டாதவராகிய சிவபெருமான் அர்த்தராத்திரியில் இரு தடவை தூது சென்றதும், முதலையுண்ட பாலனையழைத் ததும், எலும்பைப் பெண்ணுருவாக்கியதும், வேதாரணி யத்திலே கதவைத் திறந்ததும் இது முதலாகிய பல அற்புதங்களைச் செய்தது தமிழ்மொழியேயாம். பரஞ் சோதி முனிவர் பாடுகிருர் கேளுங்கள்,

தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
யுண்டபாலனையழைத்தது மெலும்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக்கதவினை திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

சிறிது போழ்திலே வாடுகின்ற பூமாலையினும். எப்போதும் வாடாதிருக்கிற அருளாளர்கள் புனைகின்ற தமிழ் மாலையே சிவபெருமானுக்கு அதிகப்பிரியமாம். தாயுமானசுவாமிகள் பாடுகின்றார்.

பன்மாலைத் திரளிருக்கத் தமையுணர்ந்தோர்
பாமாலைக் கேநீதான் பட்சமென்று
நன்மாலையா வெடுத்துச் சொன்னார் நல்லோர்
நலமறிந்து கல்லாத நானுஞ் சொன்னேன்
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
தொண்டனே னெந்நாளுந் துதித்து நிற்பேன்
என்மாலை யறிந்திங்கே வாவா என்றே
யெனக்கருளப்பாய் திருக்கருணை யெம்பிரானே.

என்றதனாற் காண்க. இனி கோலத்தாற் பாடவல்லார் நல்லார் என்றது மிகமுக்கியமான அமுதச் சொல். கோல மென்றது என்னெனின். அழகு என்பது இதன் பொருளாம், தமிழ் வேதமாகிய திருமுறைகளைப் பாடுவார், அழகுடனே பாடவேண்டுமாம். இது ஞானசம்பந் தருடைய உத்திரவு. இந்த அழகு அகத்தழகு புறத்தழகு என இரண்டாம். இதுமனம், வாக்கு, காயம் என மூன்றாக விளங்கும். இம்மூன்றும் அழகாக இருக்க வேண்டும், மனத்தில் வருகிற அசுத்தமாகிய கோபம், பொறாமை, பேராசை, காமம், ஈயாமை. அகங்காரம் முதலிய மனக் குற்றமும், வாக்கினால்வரும் அசுத்தமாகிய பொய்பேசுதல் தீயவார்த்தை பேசுதல், பிறர்மனம் நோகப் பேசுதல், பயனில்லாத வார்த்தை பேசுதல், கடுஞ்சொல் பேசுதல், ஆகிய வாக்குக் குற்றமும், காயத்தால்வரும் அசுத்தமாகிய புலாலுண்ணல், உயிர்களுக்கு துன்பஞ் செய்தல், பிறர் பொருள் கவர்தல், பெரியோர்களை வணங்காதிருத்தல் முதலாகிய காயக் குற்றமும் இல்லாதவராய் சிவதீக்ஷை பெற்றவராய், தாய், தந்தை, குரு, சிவனடியார் வழிபாடு டையவராய் உருத்திராக்கம் விபூதி நீங்காத வடிவுடைய ராய், தருமசிந்தை, சாந்தகுணம், இனிய வார்த்தை யுடையவராய் சிவபெருமானைத் தவிர வேறு தெய்வங்களைக் கனவிலும் நினையாதவராய், திருமுறை களிலும் சமயாசாரிய சந்தானசாரிய மூர்த்திகளிடமும்

மிகுந்த பக்தியுடையவராய் துன்பம், இன்பம் ஆகிய இரு காலங்களிலும் பத்தி சிறிதுங்குன்ருதவராய் உள்ளவரே கோலமுடையவராம். இவர்களே திருமுறைகளைத் தீண்டு தற்கு யோக்கியராம். இனி பாடவல்லவர் என்றது என்னெனின் பாடும் முறைப்படி பாடுவதாம். பாடும் முறை யாவது சமயாசாரியரையும் தனது தீக்ஷா குருவையும் சிவபெருமானையும் தியானித்து சமயாசாரியர் தோத்திரங் கூறி திருச்சிற்றம்பலங் கூறி திருமுறை பாடத் தொடங்க வேண்டும். பாடும்போது முதல் திருமுறை முதல் பன்னிரண்டாந் திருமுறைவரை வரிசைமாருமல் எழுத்துப் பிழையில்லாமல் பண்தவருமல் நல்ல இசையோடு நல்ல முக பாவத்தோடு பதிகத்தில் முழுவதுமாவது அல்லது முதல் கடைசி இருபாசுரங்களையாவது அன்புடன் பாடி திருச்சிற்றம்பலம் கூறுதல் வேண்டும். பன்னிரண்டாந் திருமுறை முடியும் வரை இடையில் வேறு பாட்டுக்களைப் பாடுவதும், திருமுறை வரிசைதவறிப் பாடுவதும், பண்மாற்றிப் பாடுவதும், எழுத்துப்பிழை முதலிய குற்றத்தோடு பாடுவதும் மிகுந்த பாவமாம். இக்குற்றங்களோடு பாடுவது,குளிக்கச் சென்றுசேற்றைப் பூசிக்கொள்ளுவதோடொக்கும். உலகிலே பலபக்தர்கள் அதிலும் திருமுறைகள் சோறுபோட அதை உண்டு அவற்ருலேயே பிழைத்துக் கொண்டு ஒதுவார்திருமுறைக் கலைஞர். திருமுறை இன்னிசை மணி. திருமுறைக்கடல் என்றெல்லாம் பட்டம் வைத்துக் கொண்டு, திருமுறைகள் பாடும் போது ஒருமுறையும் இல்லாமல், திருமுறைகள் பாடுவதற்கு முன்னே ஹரேராமா, ஹரே கிருஷ்ணு பாடுவதும் ஏழாந்திருமுறை பாடி நாலாந்திருமுறை பாடுவதும் ஆருந்திருமுறை பாடி முதல்திருமுறை பாடுவதுமாகிய முறைமாறிப் பாடுவதும், பண்களை மாற்றி இக்காலத்து மேனுட்டுஇசை, சினிமாமெட்டு, கும்மிமெட்டுகளில் பாடுவதும் எழுத்துப் பிழையாகவும், பத்தியில்லாமலும், சிவதீக்ஷை ஆசார அநுட்டானமில்லாமலும் இடையில் வேறு பாடல்களைப் பாடுவதுமாகிய குற்றங்களை சிறிதும் அஞ்சாமல் துணிந்து செய்து தானும் பாவத்தைத் தேடிக் கொண்டு, கேட்பவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்

கிறர்கள். இவர்கள் ஞானசம்பந்தர் முதலிய திருமுறை ஆசிரியர்களுக்கும் சிவபெருமானுக்கும் அன்பராகமாட்டார்கள். அன்பராகாமையினுலே அருளைப் பெறமாட்டார்கள். அருளைப் பெருமையினுலே மருளைப் பெறுவார்கள் என்பது சத்தியம். ஏனெனில் சம்பந்தசுவாமிகள் கோலத்தாற் பாடவல்லார் நல்லாரென்றதற்கும் நம்பியாண்டார் நம்பிகள் திருமுறைகளை பதினேரு சம்மிதா மந்திரங்களாக தொகுத்ததற்கும் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் சுவாமிநாத பண்டிதர் முதலிய பல பெரியோர்கள் கூறியருளிய சம்பிரதாய நெறிக்கும் மாருகியதால் பாவமென்பது உண்மையே. ஆகவே சிவபெருமானுடையதிருவருள் பெற விரும்பும் அடியார்களும் ஓதுவார்களும் திருமுறைகளை முறையோடு பாடி, திருவருள் பெற்றுய்ய வேண்டுமேயென்ற சம்பந்த சுவாமிகள், கோலத்தாற் பாடவல்லார் நல்லாரென்று கூறியருளினர், கோலத்தாற் பாடவல்லவரல்லாதவரெல்லாம்; பொல்லாதவரென்றும் அறிந்து கொள்ள வேண்டியது. தாயுமான சுவாமிகள் வெம்பந்தந் தீர்த்துலகாள் வேந்தன்றிருஞான சம்பந்தனை யருளாற் சாருநாளெந்நாளோ என்றதனுற் பக்தராஜ சிகாமணியாகிய சம்பந்த சுவாமிகள் சட்டப்படி நடந்தால், அருள்கிடைக்கும் இல்லாவிடில் அருள்கிடைக்காது.

கோலமில்லாமலும், குணமில்லாமலும், சீலமில்லாமலும் யாரும் பிழைக்க இயலாது. என்கிறர் தாயுமான சுவாமிகள்.

கோலமின்றி குணமின்றி நின்னருட்
சீலமின்றிச் சிறியேன் பிழைப்பனே
ஆலமுண்ட மிர்துருவாய் வந்த
காலமெந்தை கதிநிலை காண்பதே.

என்பதால் இந்த விரிவுரையைப் படிக்கும் ஒவ்வொரு அன்பர்களும் திருமுறையை முறையாக ஓதியும், பிழையாகப் பாடும் அன்பர்களுக்கு எடுத்துக் கூறியும், சிவபுண்ணியத்தைதேடிக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். தெரியாதிருந்தால் திருத்திக் கொள்ளுவதுதான்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# "கந்தபுராணம்"

திரு, ச. குமாரஸ்வாமி அவர்கள்,
'செந்திலகம்' சென்னை-48

**முன்னுரை:-**

ஸ்ரீ காசிமடம் வெளியீடான கந்தபுராணம் உரை நடையில் இருக்கும் சில செய்யுட்களையும் ஸ்ரீதிருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் எழுதிய "கந்தவேள் கருணை" புத்தகத்திலிருக்கும் சிலபாடல்களையும் (வானதி பதிப்பகம், சென்னை) படித்த அடியேனுக்கு, ஸ்ரீகச்சியப்ப சிவாச்சாரியார் சுவாமிகள் அருளிய அத்தனை செய்யுட் களையும் ஒருமுறையாவது படிக்க வேண்டும் என்ற அவா மேலிட்டது. அதன் பயனே இக்கட்டுரை,

இது ஆறு காண்டங்கள், 141 படலங்கள், (1+4+1=6!) 10,345 செய்யுட்களாலான ஒரு சிறந்த பக்திப் புராணம். ஆறுகாண்டங்களாவன:- (1) உற்பத்திக் காண்டம், (2) அசுரகாண்டம், (3) மஹேந்திரகாண்டம், (4) யுத்தகாண்டம், (5) தேவகாண்டம், (6) தக்ஷ காண்டம் என்பன.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

அறிவுடைமையாகும். அல்லாமல் நான்பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று பேசுவது அறிவுடைமையாகாது. ஆகவே சீலம், கோலம் இரண்டுமுடையவராய்த் திரு முறைகளைப் பாடுவோரே நல்லவரென்றறிந்து நாமும் அம் முறையில் நின்று ஞானசம்பந்தரால் நல்லவரென்று பெயர் பெறுவோமாக.

ஞானசம்பந்தர் இரண்டாந்திருமுறை நற்றுள் வாழ்க!.

---

(தொடரும்)

(1) இப்புராணம் திருமணத்தில் ஆரம்பித்துத் திருமணத்தில் சுபமாக முற்றுப் பெறுகிறது. (ஸ்ரீ பார்வதிதேவி கல்யாணம், தெய்வயானைத் திருமணம் வள்ளித் திருமணம்) (2) சூரபத்மன் இறக்கவில்லை, ஆனால் சேவலும் மயிலுமாகி உய்கிறான். (3) அவன் தம்பியர்கள் சிங்கமுகனும், தாருகனும் முறையே அம்பிகைக்கு சிம்ம வாகனமாகவும், ஐயனாருக்கு யானை வாகனமாகவும் ஆனார்கள். ஆகவே, இது மிகமிகச் சிறந்த பக்தி நூல் அல்லவா?

கந்தபுராணம் ஒரு பெரிய கடல், இதில் நிறைய முத்துக்கள் உள்ளன. அவற்றுள் சில முத்துக்கள் இவை:-

(1) சகோதர பாசம், (2) புத்திர பாசம், (3) பதவியிலும் பணிவு, (4) எதிரியைப் புகழ்தல், (5) தன்மான உணர்ச்சி, (6) கருணை. இந்த நல்ல குணங்களை, இப் புராணத்தை படிப்பதால், அல்லது பிறர் சொல்லக் கேட்பதால் நாம் பெறலாம். கந்தவேளின் கருணைகடாட்சமும் நமக்கு நிச்சியம் கிட்டும். மேற்கண்ட ஆறுக்கும் உதாரணங்கள் பின்வருவன:-

1) சகோதர பாசம்:

சிங்கமுகன் போரிலே மாண்டுவிடடான் என்ற செய்தியை அறிந்ததும் சூரபத்மனின் மனம் எப்படி வருந்துகிறது? தானுடாவிட்டாலும் தன்சதை ஆடும் அல்லவா? சூரன் சொல்கிறான்:- இப்பிறப்பில் பொன், மண், பெண்டு பிள்ளைகள் மற்றுமுள்ள எல்லாவற்றையும் பெற முடியும் ஆனால், என்னுடைய அருமைத் தம்பியே! உன்னை இனிப் பெற முடியுமோ? (முடியாது!) இதோ ஸ்ரீகச்சியப்பர் வாக்கு:-

"பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்
பின்னையுள பொருளை எல்லாம் பெறலாகும்
என்னையுடைய இளையோனே இப்பிறப்பில்
உன்னை இனிப் பெறுவதுண்டோ? உரையாயே"

(சிங்கமுகன்வதை)

2) புத்திர பாசம்:

"என் அரசே! ஆருயிரே, நீயமனுலகுச் சென்ருயோ அல்லது வேறிடத்தில் இருக்கிருயோ? எனக்கொன்றும் விளங்கவில்லேயே. தனியே நான் இத்துயரம் தாங்க முடியாமல் தவிக்கிறேன், நீ வரமாட்டாயா?" என்று புலம்புகிருன் சூரன். பாடல் இது:–

"கூற்ருேன் நகரிற் குறுகினேயோ அன்னதன்றேல்
வேற்ருேரிடந் தன்னில் மேவினேயோ யாதொன்றும்
தேற்றேன் தனியே திபங்குகின்றேன் இத்துயரம்
ஆற்றேன் அரசே என் ஆருயிரே வாராயோ?",

(பானுகோபன் வதை)

3) பதவியிலும் பணிவு:

வீரவாகு தேவர் முருகப் பெருமானின் தம்பியாவார். நவவீரர்களில் முதல்வர். அவர் வீரர், வாகர் (அழகர்), தேவர். கடமையே கண்ணுனவர், கண்ணியம்மிக்கவர், கட்டுப்பாடுடையவர், பானுகோபனே வதம்செய்துவிட்டு அச்செய்தியை முருகன் திருமுன்பு விண்ணப்பிக்கிருர். முருகன். "உனக்கு வேண்டும் வரம் யாது?" என்கிருர் அதற்கு வீரவாகு தேவர் மிகவும் பணிவுடன் பதில் சொல் கிருர். "ஐயனே! நிரந்தரமான குபேரனுடைய வாழ்க்கை யும் எனக்கு வேண்டாம், வானுலகாளும் இந்திர பதவியைக் கனவிலும் ஆசைப்படமாட்டேன், மாலும், பிரமனும் பெற்றுள்ள உயர்ந்த பதவியையும் ஒரு பொருட் டாக மதியேன் ஆனல், அடியேன் வேண்டுவது ஒன்றுண்டு. அது, உனது திருவடித் தாமரையிடத்து (அடியேன்) எப்போதும் அன்பு செலுத்திக் கொண்டு இருக்க வேண்டும். அதைத் தேவரீர் அருள வேண்டும்" பாடல் இது:–

"கோலநிடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலே இந்திரன் அரசினேக் கனவிலும் வெஃகேன்
மாலயன் பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சாலநின் பதத்தன்பையே வேண்டுவன் தமியேன்"

(பானுகோபன் வதைப் படலம்)

முருகனும் உடனே "உனக்கனது புரிந்தனம்" என்ருன்.

4) எதிரியைப் புகழ்தல்:

பகைவனை யாராவது புகழ்வார்களா? நிச்சியமாக மனிதர்களாகிய நாம் செய்யமாட்டோம், நம் மனத்திற்குள் வேண்டுமானுல் நினைத்துக் கொள்வோமே தவிர வெளிப்படையாகப் புகழமாட்டோம். இது மனித இயல்பு. ஆனுல் சூரபத்மன், பகைவனுகிய முருகனைப் புகழ்கிருன் இதோ அது:-

[a] "கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தனனைப்
பாலனென்றிருந்தேன் அந்நாட் பரிசிவை உணர்ந்தி லேன்யான்
மாலயன் தனக்குமேனை வானவர் தமக்கு மார்க்கம்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தியன்றே!"

[b] "சீர்க்குமரேசன் கொண்ட திருப்பெருவடிவந்தன்னில்
ஏர்க்குறும் ஒளியும் சீரும் இளமையும் எழிலும் எல்லாம்
ஆர்க்குள உலகில் அம்மா அற்புதத்தோடும் பல்கால்
பார்க்கினும் தெவிட்டிற்றில்லை இன்னுமென் பார்வை தானும்"

[c] "ஆயிரங்கோடி காமர் அழகெலாம் திரண்டொன்ருகி
மேயின வெனினும் செவ்வேள் விமலமாம் சரணம் தன்னில்
தூயநல்லெழிலுக் காற்ருது என்றிடின் இனைய தொல்லேன்
மாயிரு வடிவிற்கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்"

(யுத்த காண்டம்)

5) தன்மான உணர்ச்சி:

குமரப் பெருமானை மேற்கண்டவாறு புகழ்ந்தவன் இன்னும் புகழ்கிருன். ஆனுல் தன்மானம் ஒன்றே தன்னைத் தடுக்கிறது என்கிருன் கடைசியில்! சூரன் சொல்கிருன்: "என்னுடைய கால்கள் இவரை வலம்வர நாடுகின்றன, கைகள் தொழுதிட நாடுகின்றன, தலைவணங்குதலை நாடுகின்றது, நாக்கு இவரைத் துதிசெய்ய நாடுகின்றது, (எனது) தீமைகள் எல்லாம் நீங்கி ஆழுதலை நாடுகின்றது, உள்ளம் இவருக்கு அடிமையாய் வாழ விரும்புகிறது. ஆனுல் மானம் ஒன்றே என்னைத் தடுக்கின்றது". இனி கச்சியப்ப சிவாச்சாரியாரின் பாடலைப் படியுங்கள்:-

"சூழுதல் வேண்டும் தாள்கள்
தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி
துதித்திடல் வேண்டும் தாலு
ஆழுதல் வேண்டும் தீமை
அகன்றுநான் இவற்கு ஆளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம்
தடுத்தது மானம் ஒன்றே"

(எனவே நமக்குத் தன்மான உணர்ச்சி தேவை)

6) கருணை:

(1) வீரவாகு தேவர் "நின்பதத் தன்பையே வேண்டுவன்" என்றதும் "உனக்கது புரிந்தனம்" என்ருன் கந்தவேள்!

(2) இந்திரன் மகன் ஜெயந்தன் சிறையில் இருக்கும் போது முதலில் வீரவாகு தேவரை அனுப்பி ஆறுதல் கூறச் செய்கிருன். பிறகு தானே, ஜெயந்தன் இருக்கும் சிறைக்குச் சென்று ஆறுதல் கூறுகிருன்.

(3) முருகப் பெருமான் நினைத்திருந்தால் சூரனை ஒருகணத்தில் அழித்திருக்கலாம். அவன் கருணை வள்ளல். ஆகவே, சூரனை அவன் போக்கில் விட்டுப் பிறகு ஆட் கொண்டார். இவை கந்தன் கருணைக்குச் சான்று.

முடிவுரை:-

ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய கந்தபுராணப் பாடல்களே மேலே உள்ளவை. எவ்வளவு எளிய நடையில் தெளிவாக உள்ளன! தற்போது இச்சிறந்த நூல் கிடைக்கவில்லை. அடியேன் இரண்டாண்டுகளாக முயன்றும் கிடைக்கவில்லை. எனவே, இக்கட்டுரையின் மூலம் "குமரகுருபரன்" வாசகர்களுக்குப் பணிவன்பான வேண்டுகோள்விட எண்ணி இதை எழுதலானேன். இதற்கிடையில், ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ குருமஹா சன்னிதானம் அவர்களுக்கு எழுதி விண்ணப்பித்துக் கொண்டேன். ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள், ஸ்ரீ குமரகுருபரஸ்வாமிகள்

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

# சுட்ட பானையும் சுடாத பானையும்

திரு, இராம. கோபாலகிருஷ்ணன் எம். ஏ. அவர்கள்,
இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி, பழனி.

"இன்பமும், பிறப்பு இறப்பெனும் துன்பமும் உடன் வைத்த சோதி'யனுகிய இறைவனைக் கண்டு இன்புறற் றிருக்க வொட்டாமல் தடுப்பது மும்மலங்களின் முனைந்த செயல்கள் என்பது சைவசித்தாந்தம் கூறும் உண்மை. "எண்ணில்லாக்காலம் கண்ணில்லாக் குழவிகள் போல் ஆணவக் கருவறையில் அடைப்பட்டுக் கிடக்கும் ஆன் மாக்கள்" பிறப்பு இறப்பெனும் துன்பத்தினின்று நீங்கிப்

---

[முன்பக்கத் தொடர்ச்சி]

கலைக்கோயிலுக்கு (ஸ்ரீவைகுண்டம்) எழுதுமாறு பணித் தருளினர்கள். அதன்பலன், ஸ்ரீ காசிமடம் வெளியீடுப குதி 2-ம் மூன்றும் கிடைத்தன. இதுவும் கந்தன் கருணைதானே! எனவே நமது குமரகுருபரன் வாசக நண்பர்கள். ஸ்ரீகாசிமடம் வெளியீடு முதல்பாகம் மட்டும் அடியேனுக்கு அனுப்பிவைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள் கிறேன். ஸ்ரீலஸ்ரீ குருமஹா சன்நிதானம் அவர்கள் அருள் பாலித்து மூன்றுபகுதிகளையும் மீண்டும் பதிப்பித்துவெளியிட வேண்டுமெனவும் மிகவும் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

வள்ளியம்மை திருமணப்படலத்தில் உள்ள ஒரு பாடலுடன் இதை முடிக்கிறேன்.

"அந்தநல்வேளை தன்னில் அன்புடைக் குறவர் கோமான்
கந்தவேள் பாணிதன்னில் கன்னிகை கரத்தை நல்கி
நந்தவமாகி வந்த நங்கையை நயப்பால் இன்றி
தந்தனன் கொள்க வென்று தண்புனல் தாரை உய்த்தான்"
(வள்ளியம்மை திருமணப் படலம்)

முருகா சரணம்!!

பேரின்பமதாகிய வீடுபேற்றைப் பெற்று மரணமிலாப் பெருவாழ்வு வாழ வேண்டுமென்ற நோக்கினையே சமயச் சார்புள்ள இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன.

'சொல்லாதன எல்லாம் சொல்லி என்னைத்
தொடர்ந்திங்கு அடியேனை ஆளாகக் கொண்டு
பொல்லாஎன் நோய் தீர்த்த புனிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே''

என்று அப்பர் பெருமான் பேரின்பப் பெருநிலையை அனுபவித்துப் பாடுகின்றார். இறைவனும் 'ஊனமிலாராகி உயர் நற்றவமெய் சற்றவையுணர்ந்த அடியார் ஞானமிக நின்று தொழ நாளுமருள் செய்யவல்லார்.'

ஆயினும், சார்ந்ததன் வண்ணமாகும் ஆன்மாக்கள் பற்றற்றான் பற்றினைப் பற்றுவதைவிட, உலகப்பற்றை விரைவில்பற்றிவிடுகின்றன. அதன்பலனாக காம, குரோத, மத, மோக, மாச்சர்யங்களில் ஆர்வம் அதிகம்கொண்டு, உண்மை நிலையை உணராது தானே தலைவன், தன்னால் தான் எல்லாம் நிகழ்கின்றன என்று இறுமாப்புக்கொண்டு ஆணவத்தின் தூண்டுதலில் கர்மாக்களில் ஈடுபட்டு மாயையில் உழல்கின்றன. எல்லா உலகமும் ஆன எம் பெருமானின் எளிவந்த தன்மையை அவனருளாலே உணர்ந்து மற்றிண்டு வாரா வழிக்கு வழிதேடும் ஆன்மாக்கள் உலகத்தொடர்புள்ள காமம், குரோதம் போன்ற குணங்களை இறைவனை உணர அவன் பேரில் செலுத்த வேண்டும். உதாரணமாக, காமத்தை இறைவன் மேல் செலுத்தி காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கலாம். குரோதத்தை அவனை வெறுப்பவர்கள் மேல் செலுத்தி அடியார்க்கு ஊறுசெய்வோர்களைத் தண்டிக்கச் செய்யலாம்.[1] எறிபத்த நாயனார் சிவகாமியாண்டாரின் அரன் அருச்சனை மலர்களை நாசப்படுத்திய களிற்றினை பாகர்களோடு வீழ்த்தினார் என்ற வரலாற்றை பெரியபுராணத்தில் காணலாம்.

மேலும், ஆண்டவன் நமக்களித்த அரும்பெரும்அவயவங்கள் ஐம்புலன்களோடு ஆறுவதாக மனத்தையும்,

விலங்கினத்திலிருந்து வேறுபடுத்த அளித்துள்ளார். உலகில் பொருள்களைப் படைத்து அவற்றை அனுபவித்து ஆன்மாக்கள் ஆண்டவனின் திருவடிப் பேற்றினைப் பெற வேண்டும் என்ற நோக்கோடு கருணையே வடிவான எம் பெருமான் மனிதனுக்கு பகுத்தறியும் அறிவினை அளிக் கின்றார். "பூமியில் பிறவாததனால் நாம் காலத்தை வீணே போக்குகின்றோம். இந்தப்பூமியே சிவபெருமான் அருளால் யாவரும் உய்யும் இடம்'' என்று கருதித் திருமாலும், பிரமனும் இப்பூமியில் வந்து பிறக்க ஆசைப்படுகிறார்கள். ஆனால் இப்புவியில் பிறந்துள்ள மனிதர்கள் அறியாமை யில் ஆழ்ந்து, ஆண்டவன் அளித்த உறுப்புக்கள் மூலம் அவனை உணரப் பயன்படவேண்டுமென்பதை மறந்து, உலகி யலில் காணப்படும் சிற்றின்பங்களை உண்மையென மயங்கி புலன்வழி அறிவினை அவற்றிற்கே செயல்படுத்தி துன்பியலில் வீழ்கின்றனர். இத்தகைய நிலை ஏற்படா திருக்கும் பொருட்டு நேசமுடைய அடியவர்கள் "வாழ் முதலாகிய பொருளான அருள்நிதி தரவரும் ஆனந்த மலை'யாகிய எம்பிரானை மானிட உறுப்புக்கள் ஒவ்வொன் றும் எவ்விதம் வழிபட வேண்டும், எவ்விதம் வணங்கி வாழ்த்தி ஏத்த வேண்டும் என்று வழிவகுத்துள்ளனர்.

---

(1) 7-ம் திருமுறை திருஓணகாந்தன் தளி, 8.

வலையம் வைத்த கூற்ற மீவான்
வந்துநின்ற வார்த்தை கேட்டு
சிலைஅ மைத்த சிந்தை யாலே
திருவ டிதொழு துய்யின் அல்லால்
கலைஅ மைத்தகாமச் செற்றக்
குரோத லோப மதவருடை
உலைஅ மைத்திங் கொன்ற மாட்டேன்
ஓண காந்தன் தளியு ளீரே.

"எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே''

என்று மணிவாசகப் பெருமான் இறைவன் அருளை விழைகின்றார்[1] இவ்விதமாக புலன்வழி அறிவினை இறையறிவாக மாற்றினால் 'சிந்தையே கோயில் கொள்ளும் இறைவன்' தன்னையே தந்து தன் ஆன்மாவை அவன் வசமாக்கி ஆனந்த வாரிதியில் அழுத்தி அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற வழி வகுப்பான்.

பட்டினத்தாரின் கருத்துப்படி ஊர், உற்றார், உற்றுப் பெற்றபேர், பெண்டிர், பிள்ளைகள், சீர், செல்வம் தேசம் எவையும் நிலையற்றது. நிலையற்ற உலகில் நிலையான பரம் பொருளைக் கண்டின் புற்றிருத்தலே பிறவிப்பயன் என்று இறைவனை அணைந்தோர் எடுத்தியம்புகின்றனர். வாழ்க்கையில் நரைப்பு, மூப்பு இவை வருவது தெரிந்தும் நற்காரியங்கள் செய்யாமல் வாழ்க்கை அரைக்கப்பட்ட மஞ்சளைப் போல அவலம் ஆனதை அறிந்து இறைவன் சேவடி சேர உணரும் வாழ்க்கையை ஒன்றறியாத ஆன்மாவுக்கு உய்வகை அருள வேண்டும் என்று இரக்கின்றார் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள்; அடியார்களைக் காப்பதில் வல்லவராகிய எம்பெருமானைச் சோர்வுவரும் காலத்தில் துணையாவார் எனும் எண்ணத்தில் அக்காலத்தில் எய்ப்புவந்து நலியும்போது அவனை நினைக்க முடியாமற் போதலும் கூடுமாதலால் 'அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்' என்று பெரியாழ்வார் விண்ணப்பிக்கின்றார்.

ஆன்மாக்கள் பக்குவமுற்று இருவினையொப்பு எய்திடின் மலபரிபாகம் செய்து சத்திநிபாதம் அளித்து நேரிடையாகவோ, குருவருளினாலோ, 'தானே வந்து தலையளித்தாட் கொண்டருளும் வள்ளல் செங்கமலப் பொற்பாதம் தந்தருளுவான், என்பது ஆன்றோர் ஆய்ந்தமுடிவு.

---

(1) அப்பர் பெருமானின் 'தலையே நீவணங்காய்' என்ற திரு அங்கமாலையும், 'வாழ்ந்த வாயும் நினைக்க மடநெஞ்சும் என்ற தனித் திருக்குறுந்தொகை பாடலும்,

மணிவாசகப் பெருமானின் 'வணங்கத் தலைவைத்து, என்ற திருப் பூவல்லிப் பாடலும் இக்கருத்தை வலியுறுத்துவனவாகும்.

ஆயினும் ஆன்மாக்கள் உலகியலிலிருந்து விடுபட்டு 'பணி செய்வார்க் கிரங்கும் பசுபதியை' அடைவது எங்ஙனம்? மெய்யுணர்வு பெற விழையும் ஆன்மாக்கள் தங்கள் ஊக்கத்திஞலும் விடாமுயற்சியினுலும் மறைகளில் சொல்லப் பட்டவற்றை அறிவினுல் ஆச்சப் பூர்வமாக அறிந்து அனுபவத்திற்கு கொண்டு வந்து சுடுமட்கலத்தினைப் போலிருப் பார்; மெய்யுணர்வு பெருத உள்ளமானது அழகினையும் மடியச் செய்கின்ற வேலைப்பாடமைந்த பச்சை மண்கலம் மேகத்தின் இனிய மழைத்துளி விழுந்தவுடன் நனைந்து, கசிந்து. பொதுமிக் கரைந்து உடைந்துவிடும். ஆனல் தீயில் அழுந்திச் சுட்டு வேகவைக்கப்பட்ட மண்பானை தண்ணீரில் முழுகிக் கிடந்தாலும் உருவம் சிறிதும் அழியாது. மெய்யுணர்வினை இறைவனருனால் தலைப்பட்ட உள்ளம் சுடுபட்சலம் போன்று மானய படிக்சத்தை எரித்து ஐம்புலன் வழிசெல்லும் அவாவினை அழித்துவிடும். இந்த அரிய கருத்து ஒன்பதாம் திருமுறையில் கருவூர்த் தேவர் தம் திருவிடைமருதூர் திருவிசைப்பாவில் அழகுபட கூறுகின்ருர்.

'எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பி
　　னின்றுளி படநனைந் துருகி
அழலையாழ் புருவம் புனலொடுங் கிடந்தாங்
　　காதனேன் மாதரார் கலவித்
தொழிலையாழ் நெஞ்ச மிடர்படா வண்ணந்
　　தூங்குகிருள் நடுநல்யா மத்தோர்
மழலையாழ் சிலப்ப வந்தகம் புகுந்தோன்
　　மருவிடந் திருவிடை மருதே'

நம்பிரான் திருமூலஞரும் தமது திருமந்திரத்தில் யாக்கை நிலையாமை என்ற தலைப்பில் இதே கருத்துள்ள பாடலைக் கூறுகின்ருர் (187).

'மண்ணென்று கண்டீர் இருவகைப் பாத்திரம்
திண்ணென் றிருந்தது தீவினை சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணுனாற்போல்
எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே'

153.

சிவ சிவ]

# 'கண்ணீர் துடைத்தருள்வாய்'

*by; K. M. Jayaramakrishnan,*

**Kumaralingam.**

திருவிளங்கச் சிவயோக சித்தியெலாம் விளங்க-சிதம்பரத்தை அடுத்த மருதூரிலே தோன்றினர் இராமலிங்க அடிகளார்.

இளவயதிலே முருகன் அருள் பெற்று-சமரச சன் மார்க்க நெறிவிளங்க தேனக, தீம்பழமாக, சுவைசேர் கரும்பாக, இனித்திடும் பரம்பொருளுக்கு அருட்பாக் களால் பாமாலை அமைத்த பெருமான் அடக்கம், பணிவு இவைகளின் திருவுருவமாக விளங்கினர் என்பதனையும், பற்றற்ற தூய்மை நெறி வாழ்ந்தார் என்பதனையும் அவர் திருவாய் மலர்ந்தருளிய திருவருட்பா வாயிலாக நாம் உணர முடிகிறது. மேலும், பிற உயிர்களிடத்து கருணை யின்மை, தேவையற்ற மூடப்பழக்கங்கள் இவற்றைக் கண்டு மனம் நொந்து அவர் வடித்தகண்ணீரை திருவருட் பாவிலே 'பிள்ளைச் சிறுவிண்ணப்பம்' 'பெருவிண்ணப்பம்' என்ற தலைப்பில் காணலாம்.

'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பது வள்ளுவர் வாக்கு. அஃதாவது, அடக்கம் உடையவர்கள் அமரத் தன்மை உடையவர்களாக விளங்குவர் என்பது பொருள். அதற்கேற்ப தன்னைப்பற்றி இராமலிங்க அடிகள் கூறும் போது,

> ''விளக்கறியா விருட்டறையிற்
> கவிழ்ந்து கிடந் தழுது
> விம்முகின்ற குழவியினு
> மிகப் பெரிதுஞ் சிறியேன்'

என்று தன்னைச் சிறு குழந்தையைவிட சிறிய தன்மை பொருந்தியவராக ஒப்பிடுகின்றார்.

அதோடு மட்டுமல்ல,

"......................................மலஞ்சார்
ஈயினு நாயினு மிழிந்தேன்
.......................................புன்மையேன்"

என்று கூறுகின்றார். இவ்வாறு தன்னை மிகவும் சிறிய உயிரினத்தினும் சிறிய படைப்பாகக் கருதினர் எனின் அவரது அடக்கம், பணிவு இவைகளை நாம் எவ்வாறு இயம்புவது!

அன்பே சிவமாக அமைந்த அப்பெருஞ்சோதி மகான் தான் செய்கின்ற செயல்களை விளக்குங்கால்,

'கையுற வீசி நடப்பதை நாணிக் கைகளைக் கட்டியே நடந்தேன்' என்றும்,

'காட்டு யரணமே லிருக்கவும் பயந்தேன், காலின் மேல்கால் வைக்கவும் பயந்தேன்' என்றும்,

'நாட்டிய உயர்ந்த திண்ணைமேலிருந்து.............. களித்துக்கால் கீழே நீட்டவும் பயந்தேன்' என்றும் கூறுகின்றார்.

இதிலிருந்து அவரது அடக்கம் எத்துணை அளவு பெருகி நின்றது என்பதை ஓரளவு புரியமுடிகின்றது.

பின்னும் அன்புக்கு இலக்கணமாக, இலச்சினையாக அமைந்த 'கொல்லாமை' என்னும் தன்மையை இந்திய நாடு மிகவும் பெரியதாக மதித்து அதனைச் செயல்படுத்த அறப்போர் புரிந்து வந்துள்ளதை புத்தர்பிரான் வாழ்க்கை வரலாறு நமக்கு விளக்கும். இதனை கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் ஆசிய ஜோதி என்ற நூலிலே புத்தர்பிரான் பிம்பிசார மன்னனுக்கு அறிவுரை, அறவுரை கூறித் தொடங்கும் போது கூறியதாக அமைந்த பாடலிலே-குறிப்பிடுகின்றார்,

'காட்டுப் புலியின் கொடுமையஞ்சி— உங்கள்
கால்நிழல் தங்கிய ஆடுகளை
நாட்டுப் புலியெனக் கொல்லுவதோ—இந்த
நான்மறை போற்றிய நீதிஐயா'

நான்கு வேதங்களும் விரித்து உரைப்பது 'கொல்லாமை' எனும் அஹிம்சையே என்பதனைக் கவிமணி அவர்கள் தெள்ளத் தெளிவாக திடமாகச் சுட்டிக் காட்டியிருப்பது நமக்கு மிகவும் நல்லுரையாக அமைகின்றது அது போலவே,

எக்காலமும் இறைவன்பால் ஒன்றியமன உணர்வும் பற்றற்ற துறவறமும் கொண்டமைந்த அருட்சோதிமகான்- அஞ்சுகின்றார் எனின் 'எதற்காக?' என்பதனை ஈண்டு காண்போம்.

'துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத் தொடங்கிய போதெலாம் பயந்தேன்' -அதோடு மட்டுமா?...............

'கண்ணினு லேயோ பிறவுயிர் பதைக்கக்
கண்டகா லத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையுந் தூண்டிலுங் கண்ணி
வகைகளுங் கண்டபோ தெல்லாம்
எண்ணியென் னுள்ள நடுங்கிய நடுக்கம்
எந்தை நின்திருவுள மறியுய'

மேலும் கூறுமிடத்து,

'நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலேபலபெயர் நாட்டிப்
பலிதா ஆடு பன்றிகுக் குடங்கள்
பலிக்கடா முதலிய வுயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே
புந்தி நொந்துள நடுக்குற்றேன்
கலியுறு சிறியதெய்வ வெங்கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன்'
என்று கூறுகின்றார்.

இவ்வாறு பிற உயிர்படும் துயரத்தைத் தன்னுயிர்படும் துயரமாக மதித்து அச்செயல் கண்டு அஞ்சி, இந்நிலை மாறி, அருள்நெறி தழைக்க எல்லாம் வல்ல எம்பெருமானிடம் உளம் உருகி கண்ணீர் மல்கி அவர் வேண்டும் வரத்தினை,

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# அருளும் அருட்செல்வர் வாதவூரடிகளும்

திரு, கா. கு. சண்முகம் அவர்கள்,

கோவை மாவட்டம்.

இறைவன் அருள் மயமாய் இருக்கிருன், ''ஒன்றவன் தானே, இரண்டவன் இன்அருள்'' என்கிறது திருமந்திரம். 'அருள் என்னும் அன்பு ஈன்குழவி' என அருளை விளக்கு கிருர். வள்ளுவர், நாம் இறைவன்மீது அன்புசெலுத்திஞல், இறைவனும் நம்மீது அன்பு செலுத்துகிருர். அவ்வன்பே அவனுடைய அருள் ஆகிறது. அருளை விளக்கி, திருமூலரும், காரைக்காலம்மையாரும் பாடியுள்ள பாடல்கள் கவனிக்கத் தக்கவை.

---

முன்பக்கத் தொடர்ச்சி

'மன்றினிடை நடஞ்செய் மாணிக்க மாமலேயே
வென்றிமழுக் கையுடைய வித்தகனே யென்றெ " று
கன்றி னயந்தழுமென் 'கண்ணீர் துடைத் தருள
என்று வருவாய்?' எழுந்தறியும் பெருமானே'

என்ற இப்பாடல் வாயிலாக கண்டோம்.

எனவே நாமும்மீண்டும் இதனை நினைவுகூர்ந்து, இறையவனேஇன்றே நம் மனத்திருந்து அருள் சுரந்து உலகனைத்து உயிர்களெலாம் உவகைபெற்றுய்ய, மறநெறி மறைந்து அறநெறி தழைக்க அப்பெருமான் விடுத்த கண்ணீரில், நம் புன்மையெலாம் கழுவி, அறம் வளர்க்க வேண்டும்-அஹிம்சை வளர வேண்டும் என்று-நாமும் கண்ணீர் சிந்திவழிபட்டு, நம் கண்ணீர் துடைத்தருள இறைவனை இறைஞ்சுவோமாக.

"பாசத்தில் இட்டது அருள், அந்தப்பாசத்தின்
நேசத்தை விட்டது அருள், அந்நேசத்தில்
கூசற்ற முத்தி அருள், அந்தக்கூட்டத்தின்
நேசத்துத் தோன்றுநிலை அருளாமே"

— திருமூலர்,

"அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன்
அருளே பிறப்பு அறுப்பதானுல்—அருளால்
மெய்ப் பொருளே நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவது எனக்கு"

அருளாகிய தாயைக்கொண்டு ஆண்டவனுகிய தந்தையை அடைய வேண்டும் என்கிருர் பட்டினத்தார்.

"மாயநட்டோனரயும் மாயாமலம் எனும் மாதரையும்
வீயவிட்டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாம்
தாயுடன் சென்றுபின் தாதையைக் கூடிப்பின் தாயை மறந்து
ஏயுமதே நிட்டை என்ருன் எழில் கச்சிஏகம்பனே"

இறைவனுடைய அருள் பெற்ருேர் ஒரு சிலரே, அவருள் வாதவூரடிகளும் ஒருவர். அவர் அருளின் பெருமையையும், அருள் அனுபவத்தையும் திருவாசகத்தின் பலஇடங்களில் பாடியுள்ளார். ஈண்டு அவற்றை ஆராய்ந்து பார்த்து அறிவு பெறுவோம்.

## 1. அருள் தாகம்:

வாதவூரர் இறைவன் அருள் கிட்டவேண்டும் என்று அல்லும் பகலும் அழுது அரற்றி வேண்டினுர். அதை நாம் திருவாசகத்தில் ஆங்காங்கு காணலாம்.

"அருள்புரியாய் உடையாய், அடியேன்உன் அடைக்கலமே"

— அடைக்கலப்பத்து.

"தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேஎம்
பெருமான் எம்பானே உன்
அருள் பெறும்நாள் என்றென்றே வருந்துவனே"

— திருச்சதகம்.

## 2. அருள் பெற்ருர்:

அடிகளுடைய வேண்டுகோளுக்கு இணங்கியும், ஊழ்வினை ஊட்டியதாலும் இறைவன் அவருக்கு அருள் புரிகிருர்.

"பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணுல் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்"

— அச்சோப்பதிகம்,

### 3. கள்ளம் உடையார்க்கு அருள் இல்லை:

கள்ளம் கபடம் அற்றவருக்கே இறைவன் அருள் கிட்டும். அல்லாத வஞ்சகர் நெஞ்சில் சிஞ்சித்தும் ஈசன் அருள் சேராது. இதை நீத்தல் விண்ணப்பம் பகுதியில் எடுத்துரைக்கிறார் மணிவாசகர்.

"கள்ளத்துளேற்கு அருளாய் களியாத களிஎனக்கே')

### 4. எதற்காக அருள் புரிந்தான்?

வாழ்க்கையின் சுகத்தை அனுபவிப்பதற்காக வா வாதவூரருக்கு இறைவன் அருள் புரிந்தார்? இல்லை. பட்டம், பதவி பெறவா? இல்லை. இருந்த பதவியையும், துறப்பதற்காகவன்றோ? மேலும் பிறவியாகிய கடலை நீந்திக் கரைசேரத் தோணியாக உதவும் என்று அருள் புரிந்தார்.

1) "தானே வந்து உளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்,
ஊனுரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே

— திருவாசகம்

2) "பிறவிஎன்னும் இக்கடலை நீந்தத்தன்
பேரருள் தந்தருளினன்"

— சென்னிப்பத்து.

### 5. அருள் என்னும் தீ:

காட்டிலுள்ள மரங்கள், தீப்பற்றினுல் அழிந்துபோம், அதுபோல் அருள் பெற்றவருடைய தீவினைகளும், நல்வினைகளும் அழிந்து போக, பிறப்பு இறப்பு நீங்குகிறது.

"மடங்க என்வல்வினைக் காட்டைநின்
மண்அருள் தீக்கொளுவும்
விடங்க என்தனை விடுதிகண்டாய்"

— நீத்தல்விண்ணப்பம்.

### 6. அருளும் அகந்தையும்:

பொருட் செல்வம் வந்தாலே பலருக்கு அகந்தை வந்துவிடுகிறது. ஆனால் அதனினும் உயர்ந்த அருட் செல்வம் கிடைத்தால் அகந்தை வருவது இயல்பே. ஆனால் அன்னர் 'அகந்தைக் கிழங்கை அகழ்ந்துஎடுக்கும் தொழும்பர்'ஆக மாற வேண்டும்.

"புலையனேனையும் பொருள்என நினைந்துஉன்
அருள்புரிந்தனை புரிதலும் களித்துத்
தலையினால் நடந்தேன் விடைப் பாகா"

இங்கு புலையன் என்று கூறிக் கொள்வது, அடிகளுடைய அகந்தை அற்ற தன்மையைக் காட்டுகிறது.

### 7. அருள் பெற்றும் துன்பமா?

இன்ப வெள்ளமாகிய அருளைப் பெற்றும் துன்பத்தை அனுபவிக்க வேண்டியுள்ளதே என்றால், அது ஆச்சரியப் படத்தக்கதே. அருள் உடையார்க்குத் துன்பம் இல்லை என்பது வள்ளுவரின் பொதுக் கருத்து.

"அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி"
—குறள்.

இருப்பினும் ஆரம்பக் கட்டத்தில் துன்பங்களையும், சோதனைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. துன்ப மின்றேல், இன்பம் இல்லை என்பது போல் துன்பத்தைக் கொஞ்சமாவதும், கொஞ்ச காலமாவதும் அனுபவித்தே தீர வேண்டும்.

"வெள்ளத்துள் நாவற்றி யாங்குன் அருள்
பெற்றும் துன்பத் தினின்றும்
விள்ளக்கிலேனை விடுதி கண்டாய்"
— நீத்தல் விண்ணப்பம்.

### 8. அருளை மறந்தார்:

அருளைப்பெற்றும் துன்பமும், தோல்வியும் தொடர்ந்த காரணத்தால், வாதவூரருடைய உள்ளத்தில் சோர்வு ஏற் பட்டுவிடுகிறது. அதனால் அருள் பெற்றதையும் மறந்து

விடுகிறார். மருள் என்னும் குழப்பம் உண்டானதால், அருளை மறந்து நல்லமுறையில் வாழ முடியாததற்காக மனம் வருந்துகிறார்.

"ஆண்டநீ அளித்த அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்"
— வாழாப்பத்து.

அருளை மறந்ததாக மட்டுமல்ல, மறுத்ததாகவும் ஓர் இடத்தில் கூறுகிறார்.

"மறுத்தனன் யான்உன் அருள் அறியாமையின்
என் மணியே,
வெறுத்தெனை நீ விட்டிடுதி கண்டாய்:
வினையின் தொகுதி
ஒறுத்துஎனை ஆண்டுகொள், உத்தரகோச
மங்கைக்கு அரசே,
பொறுப்பர் அன்றே பெரியோர்
சிறுநாய்கள் தம் பொய்யினையே',
— நீத்தல்விண்ணப்பம்.

## 9. சிந்தனை திருந்தியது:

அருளை மறந்த நிலையும், துன்பம் தொடர்ந்த நிலையும் ஒரு குறுகிய காலத்துக்கு மட்டுமே, நாள் செல்ல, வயது ஏற அறியாமை நீங்கி அறிவு உண்டாகிறது. அதனால் அவருடைய சிந்தனை திருந்துகிறது. வாழ்க்கையில் கொஞ்சம் முன்னேற்றம் ஏற்படுகிறது. பிரார்த்தனைப் பத்து பகுதியில் அதைத் தெரிவக்கிறார்.

"சீரார் அருளால் சிந்தனையைத்
திருத்தி ஆண்ட சிவலோகா"

## 10. தொண்டை விக்கிக் கொள்ளுதல்:

சிந்தனை திருந்திய பின்னும், அறிவு வளர்ச்சி ஏற்பட்ட பின்னும் மீண்டும் ஓரிரு இடையூறுகள் ஏற்படுகின்றன. இதற்கு விதியே காரணம் என்கிறார் அவர். எனவே விதியால் விளைந்த விக்கினத்தை விலக்கி, உய்யும்மாறு செய்ய இறைவனை மிகவும் பணிவுடன் வேண்டுகிறார்.

"வழங்குகின் ருய்க்குன் அருளார் அமுதை
வாரிக் கொண்டு
விழுங்குகில்றேன் விக்கினேன் என்
விதி இன்மையால்,
தழங்கரும் தேனன்ன தண்ணிர் பருகத்
தந்து உய்யக் கொள்ளாய்"

— அடைக்கலப்பத்து.

இராமலிங்க அடிகளும் இதுபோன்று ஏற்பட்ட நிலையைத் தன்னுடைய அருட்பாவில் அழகாகத் தெரிவிக்கிருர்.

"களக்கமறப் பொதுநடம் நான் கண்டுகொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம் பூத்துக் காய்த்தஒரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பி உதிர்ந்திடுமோ?
வெம்பாது பழுக்கினும் என்கரத்தில் அகப்படுமோ?
கொளக்கருதும் மலமாயைக் குரங்கு கவர்ந்திடுமோ
குரங்கு கவராது எனது நரிப்பில் அகப்படினும்
துளக்கமற உண்ணுபனே? தொண்டைவிக்கிக் கொள்ளுமோ
சோதிதிருவுளம் எதுவோ? ஏதும் அறிந்திலனே"

— அருட்பா,

## 11. அவனருளால் அவன்தாள் அடைதல்:

வாதவூரருடைய வேண்டுகோளை இறைவன் தள்ளிவிடவில்லை. உண்மை அடியார்களை, குற்றமற்ற அடியார்களை இறைவன் இடையிலே கைவிடமாட்டான். ஆகவே வாதவூரருடைய தொண்டை விக்கிக் கொள்ளுதலும், தொல்லைதரும் வினைகளும் நீங்கிவிடுகின்றன. அந்நிலையில் அவர் இறைவன் திருவடிகளைக் காணும்பேறு பெறுகிருர்,

"பொய்யெலாம் விடத் திருவருள் தந்துதன்
பொன்னடி இணைகாட்டி
மெய்யனுய் வெளிகாட்டி முன்நின்ற தோர்
அற்புதம் விளம்பேனே"

— அற்புதப்பத்து.

## 12. யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்:

வாதவூரர் தாம் அருள் பெற்று, உயர்ந்தநிலை அடைத்தது போல், மற்றையோரும் அருளாகிய அமுதத்தைப் பருகி, ஆனந்தமாகிய கடலில் அழுந்துமாறு கேட்டுக் கொள்கிருர்.

"போரில் பொலியும் வேற்கண்ணுள் பங்கன் புயங்கன் அருளமுதம்
ஆரப்பருகி ஆராத ஆரவம்கூர அழுந்துவிர்"

— யாத்திரைப்பத்து.

---

# சேக்கிழாரும் சேயிழையார்களும் 8

## சடங்கவியார் மகளார்

சென்ற இதழ்களில் சங்கிலியார் பரவையார் சரித்திரங்களைச் சிந்தித்தோம். சேக்கிழார் பெருமான், பெரிய புராணத்தில் பெண்களை வர்ணித்தும், அவர்களுடைய காதற்றுறைகளைச் சிறப்பித்தும் அருளியிருக்கிறுர். மகளிர் காதல் சிறப்பு உரைத்துக் கூறினும் அக்காதல் சிவனை மறவாத காதல் ஆதலினுல் சிவஞானநூலில் இடம் பெற்றது. சிவனை மறந்து செய்யும் புண்ணிய காரியமும், பாவ காரியமாய் முடியும் என்பதைத் தக்கன் வேள்வியில் உணரலாம்.

இவ்விதழில் சடங்கவி சிவாச்சாரியார் மகளாரின் புனித சரித்திரத்தைச் சிந்திப்போம்.

பண்ணுருட்டிக்கும், மடப்பட்டுக்கும் இடையில் மணம் தவிர்ந்த புத்தூர் என்ற ஊர் உள்ளது. அதுவே புத்தூர் எனவும் பெறும். அவ்வூரில் சடங்கவி சிவாச்சாரியார் என்பவர் வாழ்ந்து வந்தார். ஆறு அங்கங்களில் வல்லவர்கள் சடங்கவி அந்தணர்கள். (சட் = ஆறு).

வேத அங்கங்கள் ஆறு. அவையாவன. சந்தசு, கற்ப சூத்திரம் சிக்கை, வியாகரணம், நிருத்தம், சோதிடம் என்னும் ஆறுமாம். இவை வேதத்தை அறிந்து ஓதற்கு இன்றியமையாதன. சந்தசு — ஆரிய யாப்பிலக்கணம் கூறும் நூல். கற்பசூத்திரம் — யாகம் முதலியன செய்யும் கிரமம் கூறும் நூல், சிக்கை (சிட்சை) — வேதோச்சாரணத்திற்கு வன்னத்திற் தோன்றும், சுரத்தையும், மாத்திரா பேதத்தையும் விளங்கச் சொல்லும் நூல். வியாகரணம் — இலக்கண நூல். நிருத்தம் — வேதத்தில் வரும் சொற்களிலுள்ள தோன்றல் முதலிய விகாரங்களையும் காட்டிப் பொருள் கூறிப் பத முடிபுகளை விளக்கும்

நூல். சோதிடம் — லௌகிக வைதிக கன்மங்களுக்கு உபயோகமாகிய துடி, இலவம் முதலிய கால விசேடங்களை இதற்கிது என்று அறுதியிட்டு விதிக்கும் நூல்.

அத்தகைய ஆறு அங்கங்களில் வல்ல சடங்கவி யாருடைய மகளைத் தனது மைந்தராம் சுந்தரமூர்த்தி நாயனுருக்குத் திருமணம் பேச, சடையனுர் விரும்பினுர். அக்காலங்களில் பெற்றோர்கள் தீர்மானம் செய்த கன்னி கையையே திருமணம் செய்து கொள்வது மரபாயிருந்தது. அம்மரபின்படி குலம், கோத்திரம், நுண்ணறிவு இவற்ருல் சுந்தரமூர்த்தி நாயனுரை ஒத்த சடங்கவி சிவாச்சாரி யாரின் மகளை மணம் பேசுவதற்குத் தக்கவர்கள் அனுப்பப் பெற்றனர். அவர்கள் சிவாச்சாரியாரிடம் சென்று மகப் பேசினர். சுந்தர மூர்த்தியாரின் குலம், குணம், பண்பு இவற்றை, முன்னரேயே அறிந்திருந்த சடங்கவியாரும் அம்மணத்திற்கு இசைந்தனர்.

இதனைச் சடையனுர் அறிந்து மகிழ்ந்தார். சுந்தர மூர்த்தி சுவாமிகள் இளமையிலேயே நரசிங்க முனைய ரையர் என்ற நாடு காக்கும் அரசருக்கு அபிமான புத்திர ராகி வளர்ந்தவர். ஆதலினுல், அரசர் என்ற முறையிலே நாட்குறித்து நாடெங்கும் மணவோலை அனுப்பினுர்கள் மணவோலைகளைப் பெற்ற ஆடவரும், மகளிரும் தம்தம் வீடுகளில் திருமணம் நடைபெறுவது போன்று மகிழ்ந் தனர். திருமணக் காரியங்களையெல்லாம் மங்கலம் பொலியச் செய்தனர். விதிப்படி நம்பியாரூரருக்குக் காப்பு நாண் அணிவித்தனர்.

குறித்த நேரம் வந்தவுடன் அனைவரும் புடை சூழச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருமண அலங்காரத்துடன், குதிரைமேலமர்ந்து, மன்னர் கோலமும், வைதீகக கோல மும் கொண்டு, சிவபெருமானைச் சிந்தித்துப் புத்தூரினை அடைந்தனர். இக்கோலத்தைச் சேக்கிழார் பெருமான் மிக நேர்த்தியாகப் படம் பிடித்து நாமெல்லாம் உணரத் தருகின்ருர்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

"மன்னவர்திருவும் தங்கள் வைதிகத்திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள நம்பியாரூரர் நாதன்
தன்னடி மனத்துட் கொண்டு தகுந்திரு நீறுசாத்திப்
பொன்னணி மணியார் யோகப் புரவி மேற்கொண்டு போந்தார்"

பொதுவாகத் திருமண மேடைக்கு மணக்கோலத்துடன் செல்லுகின்ற மணமகனே. மணமகளோ தன் சிந்தையில், மணமகன் மணமகளையும், மணமகள் மணமகனையுமே கொண்டு செல்வர். ஆனால் உயிர்கள் யாவும் பெண்களே. இறைவன் ஒருவரே எல்லா உயிர்கட்கும் பதி ஆகிய காரணத்தினாலும், சுந்தர மூர்த்தி சுவாமிகள் இயல்பாகவே இவ்வுண்மையை உணர்ந்த சிவஞானியார் ஆனதினாலும், அனைவருக்கும் நாயகனாகிய சிவபெருமானை மனத்துட் கொண்டு சென்றார் என்ற கருத்துத் தொனிக்கும்படியாக, "நாதன் தன்னடி மனத்துட் கொண்டு" என்று சேக்கிழார் அருள் வாக்கிலே நாம் உணர்கிறோம்.

மணமகனும் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பெண்கள் கண்டு களித்தனர். பலரும் பலவிதமாகப் புகழ்ந்து பண்கள் நிறைந்த கீதம் பாடி ஆடினர். இதனைச் சேக்கிழார்

கண்கள் எண்ணிலாத வேண்டும் காளையைக் காண என்பார்
பெண்களில் உயர நோற்றாள் சடங்கவி பேதை என்பார்
மண்களி கூரவந்த மணங்கண்டு வாழ்ந்தோம் என்பார்
பண்களில் நிறைந்த கீதம் பாடுவார் ஆடுவார்கள்"

என்று கூறுகின்றார்.

இங்ஙனம், மண்களிகூர மணமகளும் சுந்தரரும், மணமகளாம் சடங்கவி மகளாரும் மணவரையில் அமர்ந்தனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருக்கயிலையில் சிவபெருமானிடம் "மையல் மானுடமாய் மயங்கும் வழி ஐயனே தடுத்தாண்டருள்செய்" என்று வேண்டிக் கொண்டபடி, திருமணத்தைத் தடை செய்வதற்கென்றே, கிழவேதியராய் சிவபெருமான் வந்தார். கிழவராய் இருப்பினும் அழகு கிழவடிவு கொண்டது போன்றிருந்தது அவரது தோற்றம்.

வந்தவர் யாவரும் வியக்கும்படி "நம்பியாரூரன் என் அடிமை" என்றார். ஒரு அந்தணர் வேறொரு அந்தணர்க்கு அடிமையாவது இல்லை. நீர் என்ன பித்தனோ? என்றார் நம்பியாரூரர். வழக்கு முற்றியது. அவர் கையிலிருந்த ஓலையைப் பறிப்பதற்காகச் சுந்தரர் அவரை ஓடிப் பிடித்தார். சிவபெருமானைத் தொடர்ந்து எட்டிப் பிடிக்கக்கூடிய வல்லமை சுந்தரருக்கன்றி வேறு யாருக்கு உள்ளது. அரனார் கரத்திருந்த ஆவணத்தினைப் பறித்த சுந்தரர் வேகமாகக் கிழித்தெறிந்தார். அழகு கிழவர் ஓலமிட்டார். அவணிருந்த அனைவரும் ',இந்தப் பெரு முறை உலகிலில்லா நெறி கொண்டு பிணங்குகின்ற திரு முறை முனிவரே நீர் எங்குளீர் செப்பும்?" என்றனர்.

நான் திருவெண்ணை நல்லூரில் இருக்கிறேன், என் கையிலிருந்த ஓலையை வலிதில் பறித்துக் கிழித்த ஒன்றினாலேயே இவன் என் அடிமை என்பது உறுதியாயிற்று என்றார் கிழவேதியர். அறிவுடைய ஆரூரர் அவரைப் பார்த்து, "உமது வழக்கை உமது ஊராகிய திரு வெண்ணெய் நல்லூரிலேயே முடிவு செய்வோம்" என்று கூற இறைவனும் ஒத்த மனத்தினராய்: நரை முடியையும் கோலூன்றிய திருவடிகளையும் கொண்டு, காதுகளில் குழையும், மார்பில் புரி நூலும், தோளில் உத்தரியமும், வெயிலை மறைக்கப் பழைய குடையும் கொண்டு வேகமாகத் திருவெண்ணெய் நல்லூர் சென்றார். காந்தத்தினால் ஈர்க்கப் பெற்ற இரும்பு போல் ஆரூரர் திருமணக் கோலத்துடன் பின் நடந்தார்.

திருவெண்ணெய் நல்லூர் சபையோர் முன் கிழவேதியர் தனது வழக்கை முறையிட்டார். "சுந்தரர், இப்படிப் படி ஓலையைக் கிழித்தெறிந்தவர், மூல ஓலையையும் கிழித்தெறியா வண்ணம் பாதுகாத்துத் தருவதாக வாக்களித்தால் அதனைத் தங்கள் பார்வைக்குத் தருகிறேன்" என்று கூறினார். சபையோரும் அங்ஙனமே உறுதி கூறி அதனை வாங்கி, எல்லோரும் கேட்கும்படியாகப் படித்தனர்.

அருமறை நாவல் ஆதி சைவன் ஆரூரன் செய்கைப்
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என்பால்
வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கு ஒலை
இருமையால் எழுதி நேர்ந்தேன், இதற்கிவை என் எழுத்து''

அவ்வோலையில் சாட்சியாகக் கையெழுத்திட்டவர்கள், தங்கள் கையெழுத்தென்றே ஒப்புக் கொண்டனர். பாட்டனுர் கையெழுத்தை அவர் எழுதிய வேறு சுவடிகளைக் கொணர்வித்து ஒப்பு நோக்கினர். இரண்டும் ஒத்திருந்தன.

இத்துணை விசாரணையின் பின்னர் சபையோர் சுந்தரரை அடிமைதான் என்று தீர்மானித்தனர். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பணி செய்யத் தொடங்கினர்.

இவ்வண்ணம் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளுடைய திருமணம் விலக்கப்பட்டது. ஆனுல், அவள் சுந்தரரையே கணவனுகக் கொண்டு சதா தன் உணர்ச்சியில் கண்டு கொண்டிருந்தார். அப்படி சதா உணர்ச்சியில் கொண்டிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவஞானி ஆனதினுல் சிவலோகத்தை எளிதில் பெற்ருள். யோக வழியில் நம்பியாரூரரைத் தியான பூர்வமாக அடைந்தவர் சிவலோகம் ஆண்டவர் என்பதற்குப் பெண்களிலே சடங்கவியார் மகளும், ஆண்களிலே பெருமிதலைக் குறும்ப நாயனுரும் சான்ருவர்.

"அயலோர் தவமுயல்வார் பிறரன்றே மணமழியும்
செயலால் நிகழ் புத்தூர் வருச்சிவவேதியன் மகளும்
உயர் நாவலர் தனிநாதனை மொழியாதுணர் வழியில்
பெயராதுயர் சிவலோகமும் எளிதாம் வகைபெற்ருள்''.

மணப் பந்தலிலே அமர்ந்த ஒன்றினைத் தவிர, மணச் சடங்குகள்கூட நிகழவில்லை. அந்த மணமகனையே நினைந்து வாழ்நாள் கழித்தார். பொதுவாகப் பெண்கள் ஒருமைப்பட்ட மனம் படைத்தவர்கள். அவர்கள் போல் ஒருமை மனம் பெற்ருல் ஆடவரும் பெருமை பெறலாம் என்ற கருத்துத் தோன்றத் திருவள்ளுவரும்

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு''.

என்ருர். திலகவதியார் சரிதம் இதனேடு ஒப்பு நோக்கத் தக்கது. அதனை அவ்வரிசையில் சிந்திப்போம்.

---

(தொடரும்)

# அலங்கார நாயகன்

திருமதி ஆர். பார்வதி
தமிழாசிரியை
நாமக்கல்

## தண்டாயுதமும் திரிசூலமும்

தரும புத்திரரைப்பார்த்து ஒரு யடசன் இந்த உலகில் எது அதிசயம் என்று கேட்டானாம், பிறந்தவர்கள் இறந்து போவது நிச்சயம் என்பதை உணர்ந்தும், அதை மறந்து மக்கள் வாழ்க்கை நடத்துகிறார்களே அதுதான் பெரிய அதிசயம் என்று அவன் சொன்னானாம். அந்த விடை உலகில் பிறந்த மக்கள் எர்தக் காரியத்தைச் செய்தாலும், செய்யாவிட்டாலும் மரணம் என்ற சம்பவத்திற்கு உட்பட்டே ஆக வேண்டும் என்பதை நினைப்பூட்டுகிறது.

மரணத்தைக் கொண்டு அதனாலே வரும் துன்பத்தைக் கண்டு நாம் வருந்துகிறோம். நாம் என்ன பலகாலம் இறைவன் திருவருளில் ஈடுபட்ட பல பெரியோர்களும் அஞ்சியிருக்கிறார்கள். அர்த அச்சத்தைக் கடந்தவர்கள் மிகவும் அரிதானவர்கள். அந்த தைரியம் யாருக்கேனும் இருக்குமானால் அதை உண்டாக்கியது பெரிய அருள் என்றே சொல்ல வேண்டும். அதைப் பெறும் வரையில் பலர் அஞ்சியிருக்கிறார்கள். பின்னர் அஞ்சாமல் விஞ்சியும் இருக்கிறார்கள்.

"நாமார்க்கும் குடி அல்லோம் நமனை அஞ்சோம்"

என்று பாடிய அப்பரைப் போலவே ஆழ்வாரும்

"நாவிலிட்டுழிதர்கின்றோம், நமன் தமர்தலைகள் மீதே"

என்கிறார். எங்கள் உயிரைக் கொண்டு போவதற்கு யமன் தூதுவர் வந்தால் அவர்கள் தலையில் ஏறி மிதப்போம் என்று கூறுகிறார். இப்படிப் பேசிய கூட்டத்தில் ஒருவர் அருணகிரி நாதர். அவரும் முன்னோர்கள் சொன்னதையே சொன்னாலும் அவர் சொல்வதில் ஒரு

புதுமை இருப்பதைக் காணலாம். மற்ற அடியார்களைப் போலவே எனக்கு எமனைக் கண்டு பயம் இல்லை''. மரணப் பிரமாதம் நமக்கு இல்லையாம்'' என்று பாடினர். சிலர் யாரைக் கண்டாலும் பயமில்லை என்று தம் பக்கத்தில் யாரும் வராத வரையில் பேசுவார்கள். வந்துவிட்டால் தலை மறைந்து ஓடி விடுவார்கள். அல்லது கோழையைப் போலப் பேசுவார்கள். அருணகிரிநாதர் அத்தகையவர் அல்ல. எமனையே நேருக்கு நேர்நிறுத்து வைத்து முன்னிலைப்படுத்தி இப்பாட்டில் பேசுகிறார். இது ஒரு புதுமை.

''தண்டா யுதமும் திரிசூல
 மும்விழத் தாக்கி உன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு
 வேன் செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியஎன் அவிரோத
 ஞானச் சுடர் வடிவாள்
கண்டா யடாஅந்த காவந்து
 பார் சற்றுஎன் கைக்கெட்டவே''

நேரே ஒரு தடி எடுத்து எமன் தலையில் அடிக்கிறது போல இந்தப் பாட்டைப் பாடுகிறார். இப்படி அறை கூவுவதால் என்ன பயன் என்று சிலருக்குத் தோன்றும். இப்படி வாயினால் பேசுவதற்கே ஒரு தைரியம் வேண்டும். அந்த தைரியத்தை அருணகிரி நாதர் பெற்றிருக்கிறார், எமனைப் பற்றி நினைக்குந் தோறும் உள்ளத்தில் பயந்து பயந்து கிலி பிடித்து சாகின்ற நாம், ''எமன் என்னை ஒன்றும் செய்ய முடியாது. எமன் என் அருகில் வந்தாலும் அவனைக் கொன்று வீழ்த்துவேன்'' என்று சொல்லிச் சொல்லி உள்ளத்தில் முறுக்கு ஏற்றித் தைரியத்தைப் பெற வேண்டும் கருணையினால் இந்தப் பாட்டின் வாயிலாகச் சிறந்த உபதேசத்தைச் செய்கிறார் அருணகிரியார்.

இயமனுடைய கரத்திலுள்ள ஆயுதங்களில் தண்டாயுதமும் திரிசூலமும் சிறந்தவை. கூற்றுவன் புண்ணிய சீலர்கட்கு அருளுருவுடனும் பாவிகட்கு தண்டு, சூலம், பாசக்கயிறு முதலியவை தாங்கிக் கொண்டு தழற் பொறி

சிந்தும் கண்ணுடன் கோர வடிவுடனும் தோன்றுவன். முருகன் தண்டத்தைத் தாங்கி நிற்கிறுன். அவனைத் தந்த சிவபிரான் சூலபாணி, அவ்விருவரும் தாங்கும் தண்டத்தையும், சூலத்தையும் காலன் தாங்கி நிற்பதால் அடியவர்கள் அவனைக் கண்டு ஏமாற மாட்டார்கள்.

"தண்டாயுதமும் திரிசூலமும் விழத் தாக்கி உன்னைத்
திண்டாட வெட்டி விழ விடுவேன்"

என்கிருர், எமன் நிதானிக்கிருன், அவனைப் பார்த்து அருணகிரியார் என்னிடம் என்ன ஆயுதம் இருக்கிறது என்று யோசிக்கிருயா? சொல்கிறேன் கேள் என்று கூறுகிருர்,

செந்தில் வேலனுக்குத்
தொண்டாகிய என் அவிரோத
ஞானச் சுடர்வடிவாள்
கண்டாயடா அந்தகா"

வேலை ஆயுதமாகப் படைத்த ஆண்டவனுடைய தொண்டன் நான் என்று தொடங்குகிருர். வெல் என்பதிலிருந்து வேல் என்பது பிறந்தது. வெல்வதற்கு உரியது வேல். மற்றைப் படைகள் எல்லாவற்றிலும் சிறந்தது அது. சாதாரண வேலுக்கே அந்தப் பெருமை இருக்கிறது. எம் பெருமான் பிடுத்திருப்பது ஞான வேல்: அதனைப் பிடித்துக் கொண்டிருக்கும் பெருமான் செந்திலில் இருக்கிருர். செந்தில் வேலனுக்குத் தொண்டர் அருணகிரி நாதர். செந்தில் வேலனுக்குத் தொண்டு என்று அந்தப் படைக் கலத்திற்குப் பெயர். அவனிடத்தில் தொண்டு பூண்ட அடிமையே இவன் என்ற வலிமையே அந்த ஆயுதம். அந்தப் படை அகக் கண்ணுக்குப் புலப்படுமேயன்றி புறக் கண்களுக்குப் புலப்படுவது அன்று.

இறைவனிடத்தில் உண்மை அன்பு உடையவன் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு பாலிப்பவனுப் இருப்பான். பிற உயிர்களிடத்தும் அன்பு செய்வதை மறந்து என்னதான் ஆண்டவனிடத்திலே அன்பு செய்வதாகச் சொன்னுலும் அவன் ஆண்டவனுக்கு உண்மைத் தொண்டனுக முடியாது. அவன் அருச்சனையை ஆண்டவன்

ஏற்க மாட்டான், அருணகிரியார் எல்லா உயிர்களையும் தம் உயிர் போலப் பார்க்கின்ற கருணையாளர். என்னுடைய கையில் ஒரு சுடர் வடிவாள் இருக்கின்றது. பிரகாசம் பொருந்திய கூர்மையான வாள் அது. அந்த வாளுக்கு இரண்டு பெயர். செந்தில் வேலனுக்குத் தொண்டு என்பது ஒரு பெயர், அந்த வாள் ஞான சொரூபம். அதற்கு அவிரோத ஞானம் என்பது பெயர். தொண்டு என்பது கர்மம். செந்தில் வேலனுக்குத் தொண்டு என்பது பக்தி. அவிரோத ஞானம் என்பது ஞானம். கர்மம், பக்தி, ஞானம் என்ற மூன்றும் வெவ்வேருக இருக்க அவற்றை இவர் ஒன்ருகச் சொல்கிருரே என்ற ஐயம் இங்கே எழலாம்.

பக்தியில்லாமல் நற்கர்மம் இல்லை. ஞானமும் இல்லை. அப்படியே நற்கர்மம் இன்றி ஞானமும் இல்லை. பக்தியும் இல்லை. ஞானம் இன்றி நற்கர்மமும் பக்தியும் இல்லை. இம்மூன்றில் எது மிகுதியாக இருக்கிறதோ அதை எண்ணி பக்தி நெறி, கர்ம நெறி, ஞான நெறி என்று வழங்குவார்கள்.

இங்கே அப்பர் சுவாமிகளுடைய திருப்பாட்டு ஒன்றைப் பார்க்கலாம். ஆண்டவன் எல்லா இடத்திலும் இருக்கிருன். அப்படி இருந்தாலும் எல்லோருக்கும் தெரியவில்லையே என்று கூறுகிறவர்களுக்குச் சொல்கிருர் அப்பர் சுவாமிகள். விறகு முழுவதும் அக்கினி இருக்கிறது. ஆனுல் அது எப்பொழுது தோன்றுகிறது? விறகை எந்த இடத்திலாவது கடைந்தால் தீயானது தோன்றும். விறகு முழுவதும் இருக்கும் தீ அதைக் கடைந்தால் வெளிப்படும். பாலில் வெண்ணெய் ஒவ்வொரு துளியிலும் இருக்கிறது. அதைத் தயிராக்கிக் கடையும் போது வெண்ணெய் தோன்றுகிறது. சாணையிடாத மணி ஒளி குன்றித் தோன்றும். விறகு பால் மணி. என்ற மூன்று விதமான பொருள்களையும் கடைந்தால் அவற்றினூடே மறைந்திருக்கும். தீ வெண்ணெய் ஒளி ஆகியவை வெளிப்படும்.

அப்படியே எம்பெருமான் பார்க்குமிடம் எல்லாம் நீக்கமற இருந்தாலும் அன்பு என்னும் கோலை நட்டு ஞானம் என்னும் கயிற்றினுல் கடைந்தால் வெளிப் படுவான்.

"விறகில் தீயினன் பாலில் படுநெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுக் கோல்நட்டு உணர்வுக் கயிற்றினுல்
முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே"

ஞானம் அஞ்ஞானமாகின்ற காட்டை அறிக்கின்றது ஆதலால் வாள் என்றனர், ஆணவ இருளை அறிப்பதால் சுடர்வாள் என்றும், கூர்மையாக இருப்பதால் வடிவாள் என்றும் அழகாக உரைப்பாராயினர். ஞானம் கூர்மை யாக இருக்க வேண்டும். "கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின் நோக்கரிய நோக்கே" என்பது மணிவாசகம். அவிரோதம் என்பது விரோத மில்லாமை. எல்லாந் தானுகவும், எனதும், யானும் வேறு கவும், ஆகி நிற்தம் நிலையில் விரோத பாவம் இல்லாமல் அழிகின்றது. தான் என்பது தொலைந்தது. எல்லாம் தானுகி விட்டது. அந்த நிலையில் விரோதம் எங்கிருந்து வரும். யாரை விரோதிப்பது? யாவரும் யாவும் தானுக நிற்கும் நிலையில் எவ்வளவு சாந்தம்? எவ்வளவு அமைதி. அன்பர்கள் சற்று ஆழ நினையுங்கள். அது எத்துணை உயர்ந்த நிலை. அது மனத்தில் நினைப்பதற்குக் கூட முடியாத அத்துணைச் சிறந்த நிலை.

"எனதி யானும் வேறுகி எவரும் யானும் நானுதம்
இதய பாவனு தீதம் ......... அருள்வாயே".

திருப்புகழ்

"எல்லாமற என்னை இழந்த நலம் சொல்லாய்"
"யானுகிய என்னை விழுங்கி வெறும்
தானுய் நிலை நின்றது தற்பரமே"

அநுபூதி

இத்தகைய தடைபடாத ஞானமாகிய யான் ஒன்றே எமனை வெல்ல வல்லது.

அந்தகன் = எமன். மார்க்கண்டேயரைப் பற்ற வந்த காலத்து சிவாலயத்தைக் கண்டு வணங்காமையால் கூற்றுவனுக்கு இப்பெயருண்டாயிற்று. அருணகிரியார் இணையற்ற வீரராக இருப்பதால் யாவரையும் அடக்கவல்ல எமனை "சிறிது கைக்கு எட்டும் தொலைவில் வந்து பார். நின் கதியை அதோ கதியாக்கி விடுகின்றேன் என்று அறைகூவி அழைக்கின்ருர்.

"வராதகா லந்தகா வந்தபோதுயிர் வாங்குவனே
சிந்தத் துணிப்பன் தணிப்பருங் கோபத்திரி சூலத்தைநபே"

காலனுக்கு அஞ்சாமல் நிமிர்ந்து நிற்கும் வீரமே வீரம். இந்திரியங்களின் வழியே செல்கின்றவர்களுக்கு அந்த வீரம் வராது. இறைவன் அருளை நம்பி பக்தியில் முறுகினவர்களுக்கு வரும். உணமை அடியார்களை வீரர் என்று பெரிய புராண ஆசிரியர் சொல்கிருர்.

"ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணிஅல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னல் விளம்பும் தகையதோ"

சேக்கிழார் பெரிய அரசாங்கத்தில் மந்திரியாகப் பதவி வகித்தவர். பல போர்களைப் பார்த்தவர். வீரம இன்னது என்பதை நன்கு உணர்ந்தவர். அத்தகையவர் இந்த வீரம் என்னல் விளம்பும் தன்மையுடையதோ என்று கூறுகிருர். சிறந்த வீரம் அதுதான், அத்தகைய வீரப் பெருமக்களுடைய கூட்டத்தைச் சேர்ந்தவர் அருணகிரியார். நம்முடைய கோழைத்தனம் நீங்க இப்பாடலை நமக்கு அறிமுகப்படுத்துகிருர்.

172

# இது சரியா?

திருமதி, உமாதேவி பத்மநாபன் அவர்கள்,
அரியாங்குப்பம், புதுவை-7

முருகப் பெருமானின் மனம் குளிருமாறு கானவர்கள் எடுத்த விழா இனிதே நடைபெற்று நிறைவெய்தும் நாள் வருகிறது. விழாவின் இறுதிநாள் குறிஞ்சிநில மக்களுக்கு இன்றியமையாத நாள், அன்றுதான் வேலனுக்கு வெறியாட்டம் நடைபெறும். ஆட்டத்தின் இறுதியில் வெறியாடும் தேவராளனுக்கோ, தேவராட்டிக்கோ, முருகச் சந்நதம் வந்து வருங்காலம்பற்றிய நிகழ்ச்சிகளைக் கூறும் வைபவம் நடைபெறும். மக்கள் அனைவரும் அந்த நிகழ்ச்சியை ஆவலுடன் எதிர் நோக்கியிருந்தார்கள். மக்கள் மட்டுமா, அவ்விழாவை ஏற்பாடு செய்த மன்னவனும் கூடத்தான் ஆர்வமுடன் எதிர்நோக்கியிருந்தான். அவன் மனதில் ஆயிரமாயிரம் கவலைகள் எல்லாவற்றையும்விடப் பெருங்கவலையாக அவன்முன் நின்றது மகளின் மணவிஷயம். தன் மகளுக்கேற்ற மணாளன் பற்றி முருகனிடம் கேட்க மட்டற்ற ஆவல் கொண்டிருந்தான். அதனால் அதற்கேற்ற ஏற்பாடுகள் செம்மையாக நடைபெறுகின்றனவா என்பதை முன்நின்று கண்காணித்துக் கொண்டிருந்தான்.

இந்த ஏற்பாடுகளையெல்லாம் மற்றவர்கள் கண்டது போலவே மன்னன் மகளும் காண்கிறாள், தோழி அவளிடம் விபரமாக அவ்விழாவினைப் பற்றிக் கூறுகிறாள். வெறியாடும் வேலவனையும் சுட்டிக் காட்டுகின்றாள். அவன் கடவுளிடம் அளவற்ற பக்தி கொண்டவன் தேவராளனே

அல்லது தேவராட்டியோ கடவுள் சந்நதம் கொண்டு முக்கால நிகழ்ச்சிகளையும் அருள்வாக்காகக் கூறுவர். கணவனேடு வழிநடந்த கண்ணகி வழியில் கொற்றவைக் கோயிலில் தங்கியிருந்த போது, வேட்டுவர்கள் அங்கே கொற்றவைக்கு வழிபாடாற்றினுர், அப்போது சாலினி என்பாள் தெய்வமேற்றுப் பின் நிகழ்வு கூறி வருங்கால், கண்ணகியை நோக்கி,

இவளோ, கொங்கச் செல்வி குடமலையாட்டி;
தென்றமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய
திருமா மணி.

எனத் தெய்வ வாக்காக கூறுகின்றுள். அந்த தேவராட்டியைப் போன்றே இவனும் கூறுவான் என்று அறிவுறுத்துகின்றுள். இதைக் கேட்கும் நங்கைக்கு நகைப்புத்தான் வருகின்றது. மேலும் வெறியாடுபவன் வயது முதிர்ந்தவனுயிருப்பதும், அவன் செய்யும் செயல்களும் அவள் கண்களுக்கு கேலிக் கூத்தாகவேத் தென்படுகின்றன. அவள் தோழியிடம், நகைத்தற்குரிய செயல் ஒன்றினைக் கேளடி! மிளகுக் கொடி படர்கின்ற, குளிர்ந்த மலையில் உள்ளவன் என்தலைவன். அவன்தான் எனக்கு நோயைத் தந்தவன், நோய்தந்த அவன்தாள் அதைத் தீர்க்கும் மருந்தாகவும் உள்ளான் என்பதை அன்னை அறியாது போயினுளே! அறியாது மட்டுமா? ‘முருகன் என்மேல் வந்து அணங்கினுன், என்று தவறுதலாக நினைத்தும் விட்டாளே! அதனைப் போக்க வெறியாடுதலை நிகழ்விக்க ஏற்பாடு செய்கின்றுளே! வேலன் வருக! என்று அழைக்கின்றுளே இவையெல்லாம் நகைப்புக்கிடமாக இருக்கிறதே.

இறைவளை நல்லாய்! இதுநகை யாகின்றே
கறிவளர்தண் சிலம்பன் செய்தநோய் தீர்க்க
அறியாள் மற்று அன்னை: அலர்கடம்பன் என்றே
வெறியாடல் தான்விரும்பி ‘வேலன் வருக’ என்றுள்.

என்றுகூறி சிரிக்கின்றுள். அன்னை மேல் ஆற்றுமையும் எழுகின்றது. தாயின் உணர்வும், கண்களும்நுட்பமானவை பிள்ளைகளைப்பற்றி நன்கறிந்தவை, அன்னையிடம் ஒன்றும்

மறைக்க முடியாது என்று கூறுவார்கள். "தாயறியாச் சூலுண்டோ" என்பதோ உலக வழக்கு. ஓர்ந்து அறியும் திறன் அன்னைக்கு உண்டு என்பதைத்தான் அவ்வழக்கு எடுத்துக் காட்டுகின்றது. அப்படியிருக்க அன்னைக்கு என் நோய்பற்றி தெரியாமல் போனது வியப்பாக உள்ளதே. அன்னையும் என்னைப் போல் இளமகளாக இருந்து, காதல்வயப்பட்டு, என்னைப்போல் மனம் பேதுற்று, தன் தன் காதலனுக்காக உள்ளம் கலங்கியிருந்து பின் தன்னுடைய மனவுறுதியாலும். கற்பின் திறத்தாலும், மனம் நாடியவனையே மணந்து இன்ப வாழ்க்கை நடத்தி வருபவள் ஆயிற்றே. அத்தகையவளுக்கு என்னுடைய மனம் எப்படித் தெரியாமல் போயிற்று. தெரியாததோடு என்மேல் தெய்வக் குற்றம்ஏற்பட்டுள்ளது என்று நினைக்கத்துணிந்து விட்டாளே! இது என்ன அநியாயம். பழிஓரிடம், பாவம் ஓரிடம் என்பது போல் இருக்கிறது. என்மேல் உள்ள அன்பு அவள் அறிவுத் திறனைக் குறைத்து விட்டதா? மட்டற்ற பாசம் அவளைக் குருடாக்கி விட்டதா, இவள் செய்வதெல்லாம் நகைப்புக்கு இடமாகிறதே தவிர, அறிவுக்குப் பொருத்தமாக இல்லையே என்றெல்லாம் தன் மனதுள் தேக்கிக் கூறுகின்றாள், பெற்ற அன்னைக்குத் தன்னுடைய நிலைபுரியா விட்டால், வேறு யாருக்குப் புரியும்? யாரிடம் கூறமுடியும் என்ற மனத்தாங்கலும் அவள் மனதில் படிந்து இருப்பதால்தான் அவள்.

> கறிவளர் தண்சிலம்பன் செய்த நோய்தீர்க்க
> அறியாள் மற்று அன்னை.

என்று கூறிச் சாடுகின்றாள்.

அவளுடைய கோபம் தாயைச் சாடுவதால் மட்டும் அடங்கிவிடவில்லை. அடுத்து வெறியாடும் வேலனின் மேல் பாய்கின்றது. அவனைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு எரியும் தீயில் எண்ணெய் விட்டது போல் இருக்கிறது. தன் ஆத்திரத்தையெல்லாம் வார்த்தைகளாக்கிக் கொட்டுகின்றாள்,

நுண்ணிய வேலைப்பாடமைந்த வளைகளைப் பூண்டிருக்கும் நங்கையே! இன்னும் கேட்பாயாக! பெரியமலைக்குரிய தலைவனால் வந்த இந்த நோயைத் தீர்ப்பதற்கு வேலன் வருவானும். அப்படி அவன் வந்தால் அவன் ஒரு மடையன். என்றுகூறி வருபவள் சினமுகுதியால் இவன் மட்டும் மடையன் என்று நினைக்காதே. இவன் மேல் இவர்ந்து வருகிருனே கிரௌஞ்சத்தை யழித்த அந்த முருகன். அவன் இவனைவிடப் பெரிதும் மடமை யுடையவன்.

ஆய்வளை நல்லாய! இதுநகை யாகின்றே
மாமலை வெற்பன்நோய் தீர்க்கவரும் வேலன்!
வருமாயின் வேலன மடவன், அவனின்
குருகு பெயர்க் குன்றம் கொன்ருன் மடவன்
செறிவளைக்கை நல்லாய்! இதுநகை யாகின்றே
வெறிகமழ் வெற்பன்நோய் தீர்க்கவரும் வேலன்
வேலன்மடவன்: அவனினும் தான்மட வன்
ஆலமர் செல்வன் புதல்வன வருமாயின்,
நேரிழை நல்லாய்! நகையாம்— மலை நாடன்
மார்புதரு வெந்நோய் தீர்க்கவரும் வேலன்!
தீர்க்கவரும் வேலன் தன்னினும் தான்மடவன்
கார்க்கடப்பந் தார்எம் கடவுள் வருமாயின்.

என்று கூறுகின்ருள். பழித்துரைத்து நகையாடுகின்ருள். ஆனல் அவளது பழிப்புரையிலோ, நகையாட்டிலோ, தோழி கலந்து கொள்ளவில்லை. அவள் தலைவியைப் போல் அறிவு மயங்கி, நிலைகலங்கி நிற்கவில்லை. அவள் அறிவுடையவள், ஆழ்ந்த சிந்தனையுடையவள். அவளுக்குத் தன் தலைவியின் ஏளனமோ, நகைப்போ கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. ஆகையால் அவள் தன் தலைவியின் கூற்றை மறுக்கிருள். கடம்பனின் புகழையும், ஆற்றலையும், அருளையும் எடுத்தோதுகின்ருள். வினை தீர்க்கும் வேலினை ஏந்தியவனை குமரப்பெருமானை நீ எளியனென்றுஎண்ணி

விடாதே. அவன் தாயும், தந்தையும் சாமானியப்பட்டவர்கள் அல்லர். அப்படிப்பட்டவர்களின் மகனுக கந்தன் மட்டும் எப்படி எளியவனுக இருப்பான். "தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினுறடி பாயும்'' என்பது உலக வழக்கல்லவா? அது எப்படிப் பொய்க்கும்? பெற்ருேர்களை விட அவன் ஆற்றலும், அருளும் மிகுந்தவனுக இருப்பான், மூவிரு முகமும், ஆறிரு தோளும் கொண்ட அவன் இந்த வேலன் மேல் வந்து தங்குவது உறுதி. அவ்வாறு அவன் வருவானேயாயின் உன் காதல் பலரறிய அம்பலத்துக்கு வருவது அதைவிட உறுதி. என்று கூறுகின்ருள். ஆனுல் தோழியின் அறிவுரை அவள் எதிர்பார்த்த பலனைத்தருவதாக இல்லை. அதற்குப் பதில் எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளியது போலாகிவிடுகின்றது. அவளுடைய சினம் பல மடங்காக பொங்கி எழுகின்றது. ஓகோ அப்படியா? குமரனுன அந்த வேலவன் இந்தக் கிழவேலனின் மேல் வந்து இறங்குவானே? எல்லாவற்றையும் கூறுவானே? அதையும்தான் பார்ப்போமே! என்று கூறுகின்ருள். தோழிக்கு அவள் பேச்சும், போக்கும், வருத்தத்தையும் கோபத்தையும் கொடுத்தாலும், தலைவி இறுதியாக "எம் கடவுள்'' என்று குறிப்பிடுவது அவற்றைப் போக்கி ஆறுதல் கொடுத்து நிற்கிறது. எனவே அவள் தலைவியின் கூற்றை ஆராய்கின்ருள். தலைவியின் சொல்லும் ஒருவிதத்தில் பொருந்தமாகவேபடுகின்றது. முருகன் வெறியாடுபவனின் மேல் பிரவேசித்து வருவதால் என்ன பயன் ஏற்படப் போகின்றது. வேண்டுமானுல் தலைவியின் காதலும், அவள் அவனிடம் கொண்டிருக்கும் களவுறவும், இதனுல் அவள் துன்புற்று நிற்பதும் வெளிப்படலாம் அதனுல் அவளுக்கு பலன் ஒன்றும் இல்லையே. தலைவின் நிலையறிந்து அவளைத் தலைவனுக்கு மணமுடித்துத்தர முன்வந்தால் நல்லது. அவ்வாறு செய்யாமல்,

அவனைத்தலைவனுடன் பழகாதிருக்கும் பொருட்டுவெளியே எங்கும் செல்லவிடாமல், இல்லில் காவலுடன் செறித்து வைத்தால் அதனுல் ஏதம் உண்டாகுமே; இதையெல்லாம் உணராமல், தலைவியின் காதலை நிறைவேற்ருமல், வெறு மனே முருகன் தேவராளன் மீது ஆவேசிப்பதால் ஒரு நன்மையும் இல்லை. அருள் செய்ய மனமின்றி ஆவே சித்து வரும் முருகன் மடவனுகத்தான் இருக்க முடியும். அதைத்தான் தலைவியும் நினைக்கிருள். இந்த காரணத் தால்தான் அவள் முருகனை மடவன் என்று காய்கிருளே தவிர உண்மையில் அவளுக்குக் கடப்ப மலர்மாலை யணிந்த மார்பனுன குமரனிடம் எந்தவிதக் காழ்ப்புமில்லை என்றும் அறிந்து கொள்கிருள்.

———

(தொடரும்)

இந்த இதழ் "குமரகுருபரன் சங்கத்திற்காக"
ஸ்ரீவை. "ரத்னு" பிரஸ்ஸில்
அச்சடிக்கப்பெற்றது.